
www.padippakam.com

மார்ச் 2006

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

# WANTED



## அறிவிப்பு

**பெயர்: ஜார்ஜ் புஷ்; முகவரி: அமெரிக்க குடியரசுத் தலைவர்**

**குற்றம்: மனித இனத்திற்கு எதிரான கொடுங்கோலன்**

**உலக மேலாதிக்கப் பயங்கரவாதி**

**இந்த நபரை இந்தியாவில் நுழையவிடாமல் போராட முன்வருவோருக்கு "விடுதலைப் போராட்ட வீரர்" பட்டம் வழங்கப்படும்.**

படிப்பகம்

www.padippakam.com

"அவர்கள் என் அங்கங்களைத்தான் சிதைத்து விட்டார்கள்; என் குரல் இன்னும் என்னிடம் உள்ளது; நான் இன்னமும் பாடுவேன்!"

# தீண்டாமை எதிர்ப்பைச் சுவாசிக்கும் மாவீரன்!

போராட்டம் என்றாலே ஒதுங்கிப் போய்விடும் சமரச மனோபாவம் ஊட்டி வளர்க்கப்படும் இந்தக் காலத்தில், எப்படிபட்ட நிலையிலும் துவண்டு போய்விடாமல் நீதிக்காகப் போராடுவதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளும் மனிதர்களை அபூர்வமாகத்தான் பார்க்க முடியும். அப்படிபட்ட அபூர்வ மனிதர்தான், பாந்த் சிங்.

பஞ்சாப் மாநிலம் - மான்ஸா மாவட்டத்திலுள்ள ஜாபர் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர் பாந்த் சிங். அவர் மீது ஜாட் சாதி வெறியர்கள் நடத்திய கொலைவெறித் தாக்குதலின் காரணமாக, அவரது இரண்டு கைகளும், ஒரு காலும் சிதைந்து புரையோடிப் போய் விட்டதால், அறுவைச் சிகிச்சையின் மூலம் வெட்டி எறியப்பட்டு விட்டன. அதிகமான இரத்தப் போக்கின் காரணமாக அவரது சிறுநீரகங்கள் செயல் இழந்துவிட்டன. வாய் வழியாகத் தண்ணீர் கூடக் குடிக்க முடியாமல், சண்டிகர் அரசு மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார், பாந்த் சிங். இப்படிபட்ட நிலையில்கூடத் துவண்டு போய்விடவில்லை அவர். ''எதிரிகள் எனது உடல் உறுப்புகளைத்தான் சிதைத்து விட்டார்கள். எனது குரல் இன்னும் மிச்சமிருக்கிறது. என்னால் இன்னமும் பாட முடியும்'' என்கிறார், அந்தப் போராளி.

பாந்த் சிங்குக்கு இந்த மனவலிமையைக் கொடுத்தது எது? மேல்சாதி ஒடுக்குமுறையில் இருந்து விடுதலையடைந்து, சமத்துவமிக்க மனிதனாக வாழ வேண்டும் எனச் சிறுவயது முதலே அவரது நெஞ்சினில் கனன்று கொண்டிருக்கும் சாதி ஆதிக்க எதிர்ப்புணர்வுதான், இந்தப் போராட்டக் குணத்தை பாந்த் சிங்கிடம் வளர்த்துவிட்டுள்ளது.

ஜாட் சாதி நிலப்பிரபுக்களிடம் கூலி வேலைக்குப் போனால், தனது சகோதரர்களைப் போல, மற்ற தாழ்த்தப்பட்டவர்களைப் போல, தானும் அடிமையாக மாற்றப்படுவோம்; சுயமரியாதையோடு வாழ முடியாது என்பதனாலேயே பாந்த் சிங், விவசாயக் கூலி வேலைக்குச் செல்வதைத் தவிர்த்துவிட்டு, கறவை மாடு வளர்ப்பது, பன்றி வளர்ப்பது போன்ற சுயதொழில்களைச் செய்து, எட்டு குழந்தைகள் கொண்ட தனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். இப்படிபட்ட சுயமரியாதை வேட்கை கொண்ட தாழ்த்தப்பட்டவரை, ஆதிக்க சாதி கும்பலால் எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்?

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பாந்த் சிங்கின் மூத்த மகள் பல்ஜித் கவுரை, சிறுமி என்று கூட இரக்கம் காட்டாமல், ஆதிக்க சாதி வெறியர்கள் பாலியல் பலாத்காரப்படுத்தினர். பஞ்சாப் கிராமங்களில் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவிவிடப்படும் இப்படிபட்ட சாதி ஆதிக்க வன்முறைகளைப் போலீசு நிலையத்தில் புகார் செய்ய, ஆதிக்க சாதி வெறியர்கள் அனுமதிப்பதில்லை. பின்தங்கிய பீகாரைப் போலவே, ''முன்னேறிய'' பஞ்சாபிலும், சாதி பஞ்சாயத்துகள்தான் இப்படிபட்ட வழக்குகளில் தீர்ப்பு சொல்லும்.

பல்ஜித் கவுர் பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்ட வழக்கில், ''அச்சிறுமியைப் பாலியல் பலாத்காரப்படுத்திய குற்றவாளிகளுள், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவன் பல்ஜித் கவுரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' எனத் தீர்ப்புச் சொன்ன ஜாபர் கிராம சாதி பஞ்சாயத்து, மற்ற குற்றவாளிகள் அனைவரையும் விடுதலை செய்தது. ''இது தீர்ப்பல்ல; என் மகளை அவளின் வாழ்நாள் முழுவதும் பாலியல் பலாத்காரப்படுத்துவதற்கு வழி செய்து கொடுக்கும் ஆயுள் தண்டனை'' எனச் சாதி பஞ்சாயத்தின் தீர்ப்பை ஏளனம் செய்தார் பாந்த் சிங். தன் மகளைப் பாலியல் பலாத்காரப்படுத்திய சாதிவெறியர்கள் மீதும், அவர்களுக்கு ''மாமா'' வேலை பார்த்தவர்கள் மீதும் அவர் போலீசில் புகார் கொடுத்தார்.

பாந்த் சிங்கை மிரட்டிப் பணிய வைக்க முடியாது எனப் புரிந்து கொண்ட ஆதிக்க சாதி கும்பல், பணத்தைக் காட்டி அவரை விலைக்கு வாங்க முயன்றது. பாந்த் சிங்கின் மகள் போலீசில் கொடுத்த புகாரைத் திரும்பப் பெற்றால், அவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் கொடுப்பதாகப் பேரத்தைத் தொடங்கிய ஆதிக்க சாதி கும்பல், பேரத்தை உயர்த்திக் கொண்டே போய், பத்து இலட்ச ரூபாயும், பாந்த் சிங்கின் மகளுக்குத் தங்க நகைகளும்; அவரது திருமணத்திற்கு இரு சக்கர வாகனமும் தருவதாக வலை விரித்தது. ''பணத்திற்காக எனது மகளின் தன்மானத்தை அடகு வைக்க விரும்பவில்லை'' எனக் கூறி, அக்கும்பலின் முகத்தில் கரியைப் பூசினார் பாந்த் சிங்.

பாந்த் சிங்கின் மகள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட வழக்கில், ஜாட் சாதியைச் சேர்ந்த மந்தீர் சிங்; தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த தார்செம், குர்மாயில் கவுர் என்ற பெண் ஆகிய மூன்று குற்றவாளிகள் மட்டும் கீழமை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டனர். ஜாபர் கிராம சுற்று வட்டாரத்திலேயே, ஒரு தாழ்த்தப்பட்டவர் ஆதிக்க சாதி வெறியர்களுக்கு எதிராகப் போராடிப் பெற்ற முதல் தீர்ப்பு இதுதான் எனக் கூறப்படுகிறது.

தீண்டாமை எதிர்ப்புப் போராளி பாந்த் சிங்.



இத்தீர்ப்பு வெளிவந்த பிறகு எல்லாம் ''சுபமாக'' முடிந்துவிடவில்லை. பாந்த் சிங் நீதிக்காக நடத்திவரும் போராட்டத்தின் இரண்டாவது அத்தியாயம் நீதிமன்ற தீர்ப்பின் பிறகு தொடங்கியது. ஜாட் சாதி வெறியர்கள் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ததோடு, வழக்கைத் திரும்பப் பெறக் கோரி, பாந்த் சிங்கின் குடும்பத்தையும், அவரது உறவினர்களையும் மிரட்டி

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 5**

**மார்ச் 2006**

*உள்நாடு*
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

*வெளிநாடுகள்*
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


### கொலைகாரன், கொள்ளைக்காரன், உலகமேலாதிக்கப் போர்வெறியன்

# ஜார்ஜ் புஷ்ஷைத் துரத்தியடிப்போம்!

இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக்கப் போவதாகவும் முன்னேற்றப் போவதாகவும் கூறிக் கொண்டு உலக மேலாதிக்கப் பயங்கரவாதியும் அமெரிக்க அதிபருமான புஷ் நம் நட்டிற்கு வருவதும், இந்தப் போர்க் கிரிமினலுக்கு தேசத் துரோக காங்கிரசு கூட்டணி அரசு தடபுடலான வரவேற்பு அளிப்பதும் நம் அனைவருக்கும் நேர்ந்துள்ள தேசிய அவமானம்.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற பெயரில் பல்வேறு நாடுகளைச் சூறையாடி, அந்நாடுகளின் பொருளாதாரத்தை நாசமாக்கி, மக்களை மரணப்படு குழியில் தள்ளிவருகிறது மறுகாலனியாக்கம். பன்னாட்டு முதலாளிகளின் இலாப வெறிக்காக ஏகாதிபத்திய வல்லரசுகள் திணித்துவரும் இந்தப் புதியவகை காலனியாதிக்கத்திற்குத் தலைமை தாங்குகிறது, உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்கா.

அமெரிக்கா வகுத்துக் கொண்டுள்ள "புதிய நூற்றாண்டுக்கான திட்டம்" எனும் இந்த மறுகாலனியாக்க நடவடிக்கைகளையோ, அமெரிக்காவின் தலையீடுகளையோ எதிர்க்கின்ற நாடுகளை ஆக்கிரமிப்பது; அந்த ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதற்காக பேரழிவுக்கான ஆயுதங்களை அந்நாடுகள் இரகசியமாகத் தயாரிப்பதாகவும், பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாகவும், ஜனநாயகம் - மனித உரிமைகளை மீறுவதாகவும் கோயபல்சு பாணியில் புளுகுவது; தன்னுடைய அடாவடித்தனம், பித்தலாட்டம் அனைத்திற்கும் ஐ.நா. மன்றம் முதலான சர்வதேச அமைப்புகளைத் தனது கையாளாக்கப் பயன்படுத்திக் கொள்வது - என எல்லா அட்டூழியங்களையும் கேள்விமுறையின்றிச் செய்து வருகிறது, அமெரிக்க மேலாதிக்க வல்லரசு.

பணியாத நாடுகளுக்கு எதிராக நடத்தும் போரில் எவ்வித நியதிகளையும், சர்வதேச விதிமுறைகளையும் அமெரிக்கா மதிப்பதில்லை. குடியிருப்புகள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்துவது, வீரியம் குறைந்த அணு ஆயுதங்களையும் வெள்ளை பாஸ்பரஸ் போன்ற கொடிய இரசாயன ஆயுதங்களையும் மக்கள் மீது வீசுவது மட்டுமின்றி, போரில் இவையெல்லாம் தவிர்க்க முடியாதவை என்று திமிராகக் கொக்கரிக்கிறது. இராக்கும் ஆப்கானும் நம் கண்முன்னால் இவ்வாறு நாசமாக்கப்படுவதை நாம் அறிவோம்.

நேரடியான ஆக்கிரமிப்புப் போர் மட்டுமல்ல; பொருளாதாரத் தடைகள், வர்த்தகத் தடைகள், ஆட்சியைக் கவிழ்க்க சதிகள் - என எல்லா வகையான கிரிமினல் வேலைகளையும் கியூபா, வெனிசுலா, பொலிவியா, வடகொரியா, இரான், சிரியா முதலான பல நாடுகளில் தட்டிக் கேட்பாரில்லாத ரவுடியைப் போல அமெரிக்கா செய்து வருகிறது. இவையனைத்தையும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது, பயங்கரவாதத்தை ஒழிப்பது, கடவுளின் ஆணைப்படி தீயசக்திகளை நசுக்குவது என்ற பெயரால் நியாயப்படுத்தியும் வருகிறது.

அமெரிக்காவின் புதிய நூற்றாண்டுக்கான ஆக்கிரமிப்புத் திட்டத்தின்படி, இராணுவ நடவடிக்கைகள் மூலமும் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த மூலவளங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலமும் தனது உலக மேலாதிக்கத்தை மறுஉறுதிப்படுத்திக் கொள்ளத் துடிக்கிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஏற்கெனவே எல்லைமீறி ஆதிக்கம் செய்துவரும் அமெரிக்கா, உலகெங்கும் இராணுவச் சாவடிகளையும் முகாம்களையும் தலையீடுகளையும் மிக வேகமாகப் பல்கிப் பெருக்கியுள்ளது. தென்கிழக்கே பிலிப்பைன்சிலிருந்து மத்திய-தெற்கு ஆசியாவுக்கும் லத்தீன் அமெரிக்காவுக்கும் இவற்றை நீட்டித்துள்ளதோடு இராக்கையும் ஆப்கானையும் ஆக்கிரமித்து கொட்டமடிக்கிறது.

இத்தகைய பயங்கரவாத அமெரிக்க மேலாதிக்க வல்லரசுக்கும் அதன் தலைவரான புஷ் திணிக்கும் மறுகாலனியாக்க நடவடிக்கைகளுக்கும் விசுவாசமாக அடிபணிந்து சேவகம் செய்து வருகிறது காங்கிரசு கூட்டணி அரசு. மறுகாலனியாக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் முந்தைய பா.ஜ.க. கூட்டணி அரசையே விஞ்சி விடுமளவுக்கு வெறித்தனமான தீவிரமும் காட்டுகிறது. பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி, அரசியல் - இராணுவத் துறைகளிலும் நாட்டை அமெரிக்காவின் அடிமையாக்கி, இந்தியாவை நிரந்தரமாக அமெரிக்க ஆக்கிரமிப்புப் போர்த் தேரில் பிணைப்பததற்கான ஒப்பந்தங்களில் மன்மோகன் சிங்கும் பிரணாப் முகர்ஜியும்

தொடர்ச்சி 13-ஆம் பக்கம்

www.padippakam.com

## மானங்கெட்ட சிங்கின் துரோகம்

# அணுசக்தி என்ற பெயரால் அரசியல் - இராணுவ அடிமைத்தனம்

மறுகாலனியாக்கக் கொள்கைகளின் விளைவாக, இந்தியப் பொருளாதாரமும் எல்லா உற்பத்தி மற்றும் விநியோகத் துறைகளும் பன்னாட்டு நிறுவனங்களின் கோரப் பிடிக்குள் சிக்கி வருவதை நாமறிவோம். இந்தப் பொருளாதார அடிமைத்தனத்தை விஞ்சும் அளவில் அரசியல் மற்றும் இராணுவ அடிமைத்தனத்திற்கான சங்கிலிகள் நம் மீது பூட்டப்படுகின்றன. தனது குறைந்தபட்ச செயல்திட்டத்தில், பாரதிய ஜனதாவைப் போலன்றி தன்னை ஒரு அமெரிக்க எதிர்ப்பாளனாக சித்தரித்துக் கொண்டது, ஐக்கிய முற்போக்கு கூட்டணி.

ஆனால், பதவியில் அமர்ந்த மறுகணமே தன் நோக்கத்தைத் தெளிவாக வெளியிட்டார், மன்மோகன். ''அமெரிக்கா ஒரு வல்லரசு என்ற உண்மையை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.... உலகப் பொருளாதாரம் மற்றும் அரசியலில் அமெரிக்கா மிக முக்கியப் பாத்திரம் வகிக்கிறது... எனவே, இருக்கின்ற சர்வதேச அமைப்புகளை நமது ஆதாயத்திற்கேற்ப நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்'' என்றார். பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருக்கும் இந்த அமெரிக்க உளவாளியின் அடுத்தடுத்த நடவடிக்கைகள், நமது நாட்டை மீளவே முடியாத அடிமைப் படுகுழிக்குள் தள்ளி வருகின்றன.

ஜூன் 18,2005 அன்று புஷ்ஷும் மன்மோகனும் அமெரிக்காவிலிருந்து வெளியிட்ட கூட்டறிக்கை, அதைத் தொடர்ந்து ஜூன் 28-ஆம் தேதியன்று பிரணாப் முகர்ஜியும் ரம்ஸ்ஃபீல்டும் இணைந்து வெளியிட்ட இந்திய அமெரிக்க இராணுவ ஒப்பந்தம், அதனைத் தொடர்ந்து சர்வதேச அணுசக்தி ஏஜென்சியில் அமெரிக்காவின் ஆணைக்கிணங்க இரானுக்கு எதிராக மூன்று முறை இந்தியா அளித்திருக்கும் வாக்கு, இதே கால்கட்டத்தில் முடக்கப்பட்டிருக்கின்ற இரான் - இந்தியா எண்ணெய் எரிவாயுக் குழாய் திட்டம், தற்போது புஷ் வருகையை ஒட்டி திணிக்கப்படக் காத்திருக்கும் இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் ஆகிய இவையனைத்தும் அமெரிக்க சிலுவையில் நிரந்தரமாக இந்தியாவை அறைந்து விடுவதற்கான ஆணிகள். இவை தனித்தனி ஆணிகள் என்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாதவை என்றும் உளவாளி மன்மோகன் சிங் தொடர்ந்து புளுகி வந்தபோதிலும், உண்மை வெகு வேகமாக அம்பலமாகி வருகிறது.

இந்தியாவின் அதிகரித்து வரும் எண்ணெய் மற்றும் எரிவாயுத் தேவைகளை நிறைவு செய்வது, உலகச் சந்தையின் விலையேற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதன் மூலம் அந்நியச் செலாவணி இழப்பை தவிர்ப்பது, கப்பல் மூலம் எண்ணெய் எரிவாயு தருவிக்கும் செலவை இல்லாமல் செய்வது, இரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக எண்ணெய்க் குழாய் அமைப்பதன் மூலம் இந்தியா - பாகிஸ்தானிடையே சமாதானம் நிலவுவதற்கான பொருளாதார அவசியத்தை உருவாக்குவது - என்ற நோக்கங்களை முன்வைத்து இரான் - இந்தியா எரிவாயுக் குழாய் ஒப்பந்தம் சென்ற ஆண்டில் உருவாக்கப்பட்டது. மூன்று நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை முடிந்து ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிலையில் இருந்தது.

இரு நாடுகளுக்கிடையே மட்டுமின்றி, எண்ணெய் - எரிவாயு வளம் மிக்க இரான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து தென்கிழக்காசிய நாடுகள் உள்ளிட்ட எல்லா ஆசிய நாடுகளையும் குழாய் மூலம் இணைப்பதற்கான திட்டமும் உருவாக்கப்பட்டிருந்தது. ஆசியப் பகுதிகளில் அமெரிக்க மேலாதிக்கத்தைத் தடுக்கும் நோக்கில் ரசியா மற்றும் சீனாவால் உருவாக்கப்பட்ட ஷாங்காய் கூட்டமைப்பின் அமர்வுகளில் இந்தியா - இரான் - பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கலந்து கொண்டுமிருந்தன.

இந்த ஒப்பந்தத்தை தகர்ப்பதற்காகவே மார்ச் 2005-இல் இந்தியாவிற்கு 'விஜயம்' செய்த அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் கண்டலிசா ரைஸ், தங்களால் ரவுடி அரசாகக் கருதப்படும் இரானுடன் இந்தியா இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டால் பொருளாதாரத் தடையை எதிர்நோக்க வேண்டிவரும் என்று வெளிப்படையாக எச்சரித்தார். தன்னுடைய எரிசக்தித் தேவைகளுக்கு, கரியமில வாயுவை வெளியிட்டு சுற்றுச்சூழலை மாசாக்காத அணுசக்தியைப் பயன்படுத்துவது நல்லதென்றும் அதற்கு அமெரிக்கா உதவத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், இந்தியாவை உலக வல்லரசாக்குவது என்று அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கபடமும் திமிரும் நிறைந்த இந்தப் பேச்சை அரசு உடனே கண்டித்திருக்க வேண்டும். மாறாக, பிரதமர் மானங்கெட்ட சிங் அமெரிக்காவிலிருந்து இதை வழிமொழிந்தார். இரானிலிருந்து எரிவாயு கொண்டு வருவது பாதுகாப்பற்றது என்றும், அதற்கு எந்த வங்கியும் கடன் கொடுக்காது என்றும் அறிவித்ததுடன் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்த மணிசங்கர் அய்யரை பதவியிலிருந்து தூக்கினார்.

சுற்றுச்சூழல் குறித்த அமெரிக்காவின் அக்கறைக்கு விளக்கம் தேவையில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் தான், எரிவாயு இறக்குமதி செய்து அதிலிருந்து மின்சாரம் தயாரிப்பதாகக் கூறிய அமெரிக்க என்ரானுக்கு இந்திய அரசு அனுமதி அளித்தது. பிறகு என்ரான் திவாலான பின் அந்த நிறுவனம் வாங்கிய கடன் 3300 கோடி ரூபாயை நம் வரிப்பணத்திலிருந்து கட்டியிருக்கிறது மன்மோகன் அரசு. இன்று அதே அமெரிக்கா எரிவாயுவை விட அணுசக்தி சிறந்தது என்று சொன்னவுடனே 'ஆமாம்' என்று தலையாட்டுவதுடன் அணுசக்தி என்ற பெயரால் அடுத்த அடிமைத்தனத்திற்கு நாட்டை தயார்படுத்துகிறது.

அணுசக்தித் துறையைப் பொருத்தவரை, அதன் சிவில் பயன்பாட்டுக்கும் (மின்சாரம் போன்றவை) இராணுவப் பயன்பாட்டுக்கும் இடையில் வேறுபாடு இருந்தாலும், இவற்றின் அடிப்படையாக அமையும் ஆய்வுகளில்

படிப்பகம்

www.padippakam.com

வேறுபாடு இல்லை. மேலும், அணு வெடிப்பு சோதனை நடத்தியுள்ள இந்தியா, அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் (NPT) கையெழுத்திடவும் மறுத்து வரும் நாடுமாகும். இதன் காரணமாக, அவ்வப்போது பொருளாதாரத் தடைகள் விதிப்பதுடன், அணுசக்தி தயாரிப்புக்குத் தேவையான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை இந்தியாவுக்கு வழங்க அணு ஆயுத வல்லரசுகள் மறுத்தும் வருகின்றன.

இந்தியாவில் யுரேனியம் கிடைப்பதில்லை என்றாலும், அணுசக்தி தயாரிக்கப் பயன்படும் தோரியம் என்ற தாதுப்பொருள் ஏராளமாக (உலக இருப்பில் 75%) உள்ளது. துவக்கமுதலே இந்தியாவின் அணுசக்தி ஆய்வுகள் தோரியத்தை மையமாக வைத்து செய்யப்படுவதால், இந்த ஆய்வில் முன்னிலை வகிக்கிறோம் என்றும் இறுதிக்கட்ட ஆய்வில் உள்ள நாம் வெகு விரைவில் இத்துறையில் உலகின் முதல் நாடாகிவிடுவோம் என்றும் கூறுகிறார், பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இயக்குநர் ஏ.என்.பிரசாத். இதன் மூலம் ஆண்டுக்கு 5,30,000 மெகாவாட் மின் சாரத்தை அடுத்த 300 ஆண்டுகளுக்கு உற்பத்தி செய்ய முடியும் என்றும் கூறுகிறார்.



புஷ் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பாகவே அணுசக்தி ஒப்பந்தத்தைத் தயாரித்துவிட வேண்டும் என்பதற்காக, தில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பேச்சுவார்த்தை நடத்தும் அமெரிக்காவின் வெளியுறவு இணைச் செயலர் நிக்கோலஸ் பார்ன்ஸ்.

மன்மோகன் சிங் கும்பல் அமெரிக்காவில் கையெழுத்திட்டிருக்கும் இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம், தோரியத்திலிருந்து அணுசக்தி தயாரிக்கும் இந்த சுயசார்பான ஆய்வை ஒழித்துக் கட்டி, யுரேனியத்தை, அதாவது அமெரிக்க இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலையை இந்தியா மீது திணிக்கிறது. அணுமின்சார உற்பத்தி தோற்றுவிக்கும் அணுக்கழிவிலிருந்துதான் அணு ஆயுதம் தயாரிக்கப்படுவதால், இந்த அணுக்கழிவுகள் அனைத்தையும் தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென அமெரிக்கா கோருகிறது. மேலும், சிவில் உற்பத்திக்குத் தரப்படும் யுரேனியம் ஆயுத உற்பத்திக்கு பயன்படுத்தப்படாமல் இருக்கிறதா என்று கண்காணிக்கும் அதிகாரமும், இந்திய அணு ஆய்வுகளை சோதனையிடும் அதிகாரமும் தனக்கு வேண்டுமென்கிறது.

இந்த ஒப்பந்தம் ஒரு அடிமைச் சாசனம் என்று எதிர்க்கும் இந்திய அணு விஞ்ஞானிகள் அனைவரும், அணுசக்தித் துறையில் அமெரிக்கா முன்னிலை வகிக்கவில்லை என்றும், தற்போதைய நமது மொத்த மின் சக்தி தேவையில் 3% மட்டுமே அணுசக்தியிலிருந்து கிடைப்பது என்பதால் இந்த ஒப்பந்தமே அர்த்தமற்றது என்றும் குமுறுகிறார்கள்.

ஆனால், இவையெதையும் மன்மோகன் அரசு பொருட்படுத்தவில்லை. அணுசக்தி ஆய்வில் முன்னேறிய நாடு என்ற 'பிரம்மரிஷி' பட்டத்தை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கவிருப்பதாகவும், ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலில் இடம் பிடிக்க இது உதவுமென்றும், அதாவது ரைஸ் கூறியது போல இந்தியாவை அமெரிக்கா வல்லரசாக்குமென்றும், அதற்காக இத்தகைய தியாகங்களைச் செய்யலாமென்றும் நியாயப்படுத்துகிறது. ஆனால், இந்தியாவை 'அணு ஆய்வில் முன்னேறிய நாடு' என்று தாங்கள் கருதவில்லையென்றும், அணு ஆய்வில் ஈடுபட்டுவரும் நாடு என்று மட்டுமே கருதுவதாகவும் கூறி குட்டை உடைத்துவிட்டார், அமெரிக்க வெளியுறவுத்துறை.இணைச்செயலர் பார்ன்ஸ்.

இருந்தபோதிலும், புஷ் வருகையையொட்டி இந்திய அமெரிக்க அணுசக்தி கூட்டு என்ற பெயரிலான இந்த அடிமை ஒப்பந்தத்தை நிறைவேற்றத் துடிக்கிறது மன்மோகன் அரசு. ஏனெனில், இதற்கான அடிப்படை இந்திய அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தில் இருக்கிறது. ஆசியப் பகுதியில் சீனாவுக்கு எதிரான அமெரிக்க அடியாளாக இந்தியாவை மாற்றும் ஜூலை, 2005 ஒப்பந்தம் இந்த அணுசக்தி அடிமைத்தனத்தை முன் நிபந்தனையாகக் கொண்டது. இந்தியாவில் சீனத்தை குறிவைத்து பாட்ரியட் ஏவுகணைகளை நிறுவுவது, பனிமலைகள் முதல் பாலைவனம் வரை அனைத்து வாய்ப்புகளையும் கொண்ட இந்தியாவில் தனது ஆக்கிரமிப்புப் போருக்கான பயிற்சிகளை அமெரிக்க இராணுவம் மேற்கொள்வது, அமெரிக்காவின் எதிர்கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் காலாட்படையாக இந்திய இராணுவம் பங்கு பெறுவது, 32,000 கோடி ரூபாய்க்கு அமெரிக்காவிடமிருந்து ஆயுதக் கொள்முதல், அமெரிக்க-இந்திய கடற்படைகள் இணைந்து இந்து மாக்கடல் பிராந்தியத்தில் ரோந்து சுற்றுவது என்பன போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியது அவ்வொப்பந்தம்.

வல்லரசு என்ற பெயரில் அமெரிக்க அடியாளாக நியமனம் பெறத் துடிக்கும் இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்தக் கனவுதான் இரானுக்கு எதிரான அநீதியான தீர்மானத்தில் இந்தியாவை கையெழுத்திட வைத்திருக்கிறது. உலக நாடுகளும் மக்களும் கண்டு வெறுக்கும் இசுரேலைப் போன்ற - ஆனால் அதைவிடத் தரம் தாழ்ந்த - அடியாளாக நம் நாடு மாற்றப்படுகிறது. மறுகாலனியாக்கம் தோற்றுவிக்கும் பொருளாதார அடிமைத்தனத்தினும் கொடிய இந்த அடியாள்தனத்திலிருந்து நாட்டை விடுவிக்க வேண்டுமானால் உளவாளி மன்மோகன் சிங் அரசு உடனே தூக்கியெறியப்பட வேண்டும். அமெரிக்க மேலாதிக்கத்திற்கும் மறுகாலனியாதிக்கத்திற்கும் எதிரான போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக தேர்தல்:

# பதவியைப் பிடிக்க லாவணி! ஏகாதிபத்திய சேவையில் ஓரணி!

அவமானம்! தமிழகம் மிகப் பெரும் அவமானத்தைச் சுமந்து நிற்கிறது. தனது''பணப்புழக்க'' ஆட்சியில், போராடிய விவசாயிகளையும் தொழிலாளர்களையும் அரசு ஊழியர்களையும் மிருகத்தனமாக ஒடுக்கி வந்த பாசிச ஜெயா, தேர்தல் நெருங்கிவிட்டதும் இப்போது சலுகைகளை வாரியிறைக்கிறார். கடன்சுமை தாளமுடியாமல் தஞ்சை விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட போது, ''வைப்பாட்டி வைத்திருந்த விசயம் வெளியே தெரிந்து விட்டதால் தற்கொலை செய்து கொண்டதாக'' அவதூறை அள்ளி வீசிய அதே ஜெயா, இப்போது விவசாயிகள், நெசவாளர்கள், மாணவ-மாணவியர், சிறுபான்மையினர், அரசு ஊழியர்கள் என அனைவருக்கும் கோடிகளில் திட்டங்களை அறிவித்து இழுக்கப் பார்க்கிறார். அடுத்த கட்டமாக லாட்டரி, சாராயம், மணல் குவாரி, தனியார் பேருந்து முதலானவற்றைத் திறந்து விடுவதற்குக் காய்களை நகர்த்துகிறார்.

''தமிழர்கள் சூடு சொரணையற்ற நாய்கள். எட்டி உதைத்தாலும் எலும்பை வீசினால் வாலாட்டும் இழிபிறவிகள்'' என்று பார்ப்பன-பாசிசத் திமிரோடும் கான்வெண்ட் கொழுப்போடும் தமிழக மக்களை மீண்டும் இச்சலுகை அறிவிப்புகள் மூலம் இழிவுபடுத்தி வருகிறது பாசிச ஜெயா கும்பல். ''எல்லோரையும் விட சர்வ வல்லமை மிக்க மக்கள் கூட்டணியைக் கட்டிக் கொண்டுள்ளதாக'' அறிவித்துக் கொண்டு, பண பலம்-சாதிய பலம் - கிரிமினல் பலத்துடன் சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கக் கிளம்பியுள்ளது; ''அன்னபூரணி, எம்மைப் பாரு நீ!'' என்று டிஜிட்டல் பேனர்களை வைத்து, எடுபிடிகள் தமது விசுவாசத்துக்குக் கருணை காட்டுமாறு 'அம்மா'வுக்கு வேண்டுகோள் விடுத்து, தேர்தல் திருவிழாவைச் சூடேற்றுகின்றனர்.

தமிழகத்தின் அவமானகரமான இந்தப் பாசிசப் பேயாட்சிக்கு எதிராகப் போராடாமல் ஐந்தாண்டு காலம் முடங்கிக் கிடந்த எதிர்க்கட்சிகள், மக்களின் அதிருப்தியைச் சாதகமாக்கிக் கொண்டு தமது ஏழு கட்சி கூட்டணி பலத்தோடு தேர்தலைச் சந்திக்கக் கிளம்பியுள்ளன. கடந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைப் போலவே, இப்போது சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றிக் கனி பாலில் விழுந்து தம் வாயில் வந்து விழுந்து விடும் என்று தி.மு.க. தலைமையிலான எதிர்கட்சி கூட்டணி நம்புகிறது.

ஏழு கட்சி கூட்டணி தி.மு.க.வுக்கு பலம் என்றால், அதுவே அதன் பலவீனமாகவும் உள்ளது. கூட்டணியிலுள்ள கட்சிகள் அனைத்தும் அதிகப்படியான இடங்களைக் கேட்கின்றன. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைப்பது, கூட்டணிக் கட்சிகளின் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுவது எப்படி என்று புரியாமல் தடுமாறுகிறது தி.மு.க.

தொகுதிகளைக் கேட்பதில் தியாக உணர்வு தேவை என்று கூட்டணி கட்சிகளுக்கு உபதேசித்தார் கருணாநிதி. இதை ஏற்க மறுத்து, ''கூட்டணியில் மூன்றாவது பெரிய கட்சி நாங்கள்தான்; நாங்கள் கூட்டணி சேரும் கட்சிதான் ஆட்சியமைக்க முடியும்; எனவே, சட்டப் பேரவையில் கௌரவமான பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்'' என்று வைகோ பத்திரிகைகள் மூலமாகக் கோரிக்கை வைத்தார். அவருக்கு அடுத்தநிலையில் உள்ள ம.தி.மு.க. தலைவர்களோ, தி.மு.க.வை மறைமுகமாகச் சாடி மேடைகளில் பேசிவந்தனர். அதற்கு ஏற்றார்போல அ.தி.மு.க. அவைத் தலைவர் காளிமுத்து, வெளிப்படையாகவே வைகோவுக்கு அழைப்பு விடுத்தார். இத்தனைக்கும் பிறகும் நடப்பது எதுவுமே தெரியாததைப் போல மவுனம் காத்தும், ஈரோட்டமாகவும் மதில் மேல் பூனையாகவும் நின்றார் வைகோ. கடந்த சில் வாரங்களாக நடந்த இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் முடிவுக்கு வந்து, தாம் தி.மு.க. கூட்டணியில் நீடிப்பதாக வைகோ இப்போது அறிவித்துள்ளார். இந்தக் கொள்கை மறவரின் சந்தர்ப்பவாதத்தையும் ஊசலாட்டத்தையும் மூடி மறைத்து இதையே போர்த் தந்திரம், வியூகம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறது, அக்கட்சி.

**உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சியை, உலக வங்கியின் அதிகாரத்தை எந்த ஓட்டுக்கட்சியும் எதிர்ப்பதில்லை. இக்கட்சிகள் அனைத்தும் ஏகாதிபத்திய எடுபிடிகள்; உலக வர்த்தகக் கழகத்தின் கங்காணிகள்; உலக வங்கியின் அடிமைகள்.**

கூட்டணி முடிவான போதிலும் தொகுதிப் பங்கீடுகள் இன்னும் முடிவாகவில்லை. தேர்தலுக்கு இன்னும் அவகாசம் இருப்பதால், ம.தி.மு.க. உள்ளிட்டு எந்தக் கட்சியும் எந்தப் பக்கமும் அணி மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கடைசியில், கொள்கைக்கான கூட்டணி என்பதெல்லாம் காலாவதியாகி, இத்தனை தொகுதிகள் கொடுத்தால் இந்தக் கூட்டணி; இல்லையேல் அந்தக் கூட்டணி என்பதாக ஓட்டுக் கட்சிகளின் பிழைப்புவாதம் நாறத் தொடங்கிவிட்டது. இதை நன்குணர்ந்த பாசிச ஜெயா, ''கூட்டணிக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன. என் அனுபவத்தில் கூட்டணி கடைசி நேரத்தில் தான் முடிவாகிறது'' என்று பிழைப்புவாத பொறுக்கி அரசியலின் மகிமையைச் சந்தி சிரிக்க வைக்கிறார். 'கொள்கையாவது, வெங்காயமாவது! எல்லாமே சூட்கேசில் அடக்கம்!' என்று பா.ம.க.வின் 3 எல்.எல்.ஏ.க்களை விலை பேசியும், திண்டிவனம் ராமமூர்த்தி கும்பலை வைத்து காங்கிரசை உடைத்தும் கொக்கரிக்கிறார் பாசிச ஜெயா. நடிகர் விஜயகாந்த் ஒரு கட்சியைத் தொடங்கி நடத்துமளவுக்கு தமிழகத்தின் பிழைப்புவாத பொறுக்கி அரசியல் புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இப்பிழைப்புவாத பொறுக்கி அரசியல் லாவணியில் பாசிச ஜெயா - சசிகலா கும்பல் அடித்த கொள்ளை, டான்சி வழக்கு, சொத்துக் குவிப்பு வழக்கு, அரசு ஊழியர் போராட்டம், போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம், தஞ்சை வறட்சி - பட்டினிச் சாவுகள், நெசவாளர்கள் வாழ்விழந்து கஞ்சிக்குக் கையேந்தி நின்ற அவலம், காவிரி நீரில் தமிழகத்தின் உரிமை தொடர்ந்து மறுக்கப்படும் அநீதி, சுனாமி மற்றும் வெள்ளப் பேரழிவுகள், வெள்ள நிவாரணப் படுகொலை - என அனைத்தும் கடந்தகால நினைவுகளாக மாற்றப்பட்டு விட்டன.



பாசிசப் பெருச்சாளியைத் தப்பவிட்டு எலிப் புழுக்கைகளை அடித்த வன் கதையாக, தேர்தல் நெருங்கிவிட்டதால், டாஸ்மாக் கடைகளை ஆக்கிரமித்துள்ள மிடாஸ் கோல்டன் டிஸ்லரி என்ற சாராயக் கம்பெனி சசிகலாவுக்குச் சொந்தமானது என்றும், சிப்காட் நில விற்பனையில் ரூ. 200 கோடி ஊழல் நடந்துள்ளது என்றும் ஜெயா கும்பலுக்கு எதிராகக் குற்றம் சாட்டினார், கருணாநிதி. ஜெயாவின் கணக்குத் தணிக்கையாளர், மருத்துவர் வீடுகளில் மைய அரசின் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இதற்குப் பதிலடியாக, ஏகபோகமாகக் கொள்ளையடித்து வந்த கருணாநிதி குடும்பத்தின் சுமங்கலி கேபிள் விஷன் உள்ளிட்ட சில எம்.எஸ்.ஓ.க்களை தமிழக அரசு கையகப்படுத்தும் சட்டத்தை உடனே நிறைவேற்றினார், பாசிச ஜெயா. அவ்வளவுதான்! கருணாநிதி வாய்மூடிக் கொண்டார். ஜெயா அறிவித்த கேபிள் டி.வி. சட்டமும் செயல் வடிவம் பெறவில்லை. 'நீ என்னைச் சீண்டாதே! நான் உன்னைச் சீண்டமாட்டேன்' என்று இருபெரும் கோடீசுவரர்களும் எழுதப்படாத ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, இந்த விவகாரத்தை நீர்த்துப் போகச் செய்து விட்டார்கள். இந்த விவகாரம் மட்டுமின்றி, நாட்டை அடிமைப்படுத்தும் மறுகாலனியாக்க கொள்கைகளை விசுவாசமாக செயல்படுத்துவதிலும், மக்களை ஒடுக்குவதிலும் ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே எழுதப்படாத ஒப்பந்தம்தான் நிலவுகிறது.

விவசாயத்தையும் கைத்தறியையும் ஒழிப்பது முதல் ரேசன் கடைகளை மூடுவது வரை அனைத்துமே உலக வங்கியின் ஆணைகள். கல்விக் கட்டண உயர்வு முதல் பேருந்துக் கட்டண உயர்வு வரை எல்லாமே உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனைகள். வேலை நிறுத்தத் தடைச் சட்டம் முதல் பொடா சட்டம் வரை அனைத்துமே அமெரிக்காவின் - பன்னாட்டுக் கம்பெனிகளின் கட்டளைப்படி போடப்படும் கருப்புச் சட்டங்கள்.

உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சியை, உலக வங்கியின் அதிகாரத்தை



எந்த ஓட்டுக்கட்சியும் எதிர்ப்பதில்லை. நான் ஹூண்டாயை அழைத்து வந்தேன், நான் நோக்கியாவை இழுத்து வந்தேன் என்று பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு போட்டிப் போட்டுக் கொண்டு சேவை செய்யும் இக்கட்சிகள் அனைத்தும் ஏகாதிபத்திய எடுபிடிகள்; உலக வர்த்தகக் கழகத்தின் தூங்காணிகள்; உலக வங்கியின் அடிமைகள்.

எனவேதான், மைய அரசில் ஆளுங்கட்சியாகவும் மாநிலத்தில் எதிர்க்கட்சிகளாகவும் உள்ள தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. இடது-வலது கம்யூனிஸ்டுகளும் காங்கிரசும், ஜெயலலிதாவை எதிர்க்கின்றனவே தவிர, ஜெயலலிதாவின் மறுகாலனியாக்க நடவடிக்கைகளை எதிர்ப்பதில்லை. அதேபோல கருணாநிதியையும் காங்கிரசையும் எதிர்க்கும் ஜெயா, மைய அரசின் மறுகாலனியாக்கக் கொள்கைகளை எதிர்ப்பதில்லை. நெல்லையில் கொலைகார கோக்கின் கொள்ளைக்கு பாசிச ஜெயா அரசு பாதுகாப்பு கொடுத்துள்ளதை எதிர்த்து இக்கட்சிகள் வாய்திறக்காமல் நழுவிக் கொள்கிறதென்றால், சிறு வியாபாரிகளை ஒழித்துக்கட்ட சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீட்டுக்கு தாராள அனுமதி அளித்துள்ள மைய அரசுக்கு எதிராக ஜெயா வாய் திறக்க மறுக்கிறார். ஏழு கட்சி கூட்டணி, மக்கள் கூட்டணி என்ற வார்த்தைகளுக்கு பின்னே மக்கள் விரோத மறுகாலனியாதிக்கக் கூட்டணி ஒன்று தான் உள்ளது.

கல்வி இல்லை; வேலை இல்லை; மருத்துவம் இல்லை; உணவு இல்லை; தண்ணீர் இல்லை; வாழ்வு இல்லை. வாழ்விழந்த விவசாயிகளும் வேலையிழந்த தொழிலாளர்களும் பலகோடிப் பேராக உள்ள நிலையில் தமிழகத்தின் உயிராதாரமான இப்பிரச்சினைகளுக்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி எந்த ஓட்டுக்கட்சியும் வாய் திறப்பதில்லை. விவசாயம் நசிந்து போனதற்கும், கைத்தறி - விசைத்தறி - சிறுதொழில்களின் சிதைவுக்கும், பஞ்சம் பிழைக்க மக்கள் ஊரை விட்டு ஓடும் அவலத்திற்கும் இந்தத் தேர்தலுக்கும் என்ன உறவு? மறுகாலனியாக்கத்துக்கும் விவசாயம் - சிறுதொழில்களின் அழிவுக்கும் என்ன உறவு? - இவையனைத்தும் ஓட்டுக் கட்சிகளாலும் செய்தி ஊடகங்களாலும் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. அரசியலற்ற அற்ப விவகாரங்களும் கிசுகிசுக்களும் வதந்திகளும் ஊகங்களுமே அரசியலாக ஊதிப் பெருக்கிக் காட்டப்படுகின்றன.

இதனால்தான், எந்தவொரு ஓட்டுக் கட்சிக்கும் ஆதரவு அலை வீசவில்லை; எதிர்ப்பு அலையுமில்லை. ஓட்டுக்கட்சிகளுக்கும் முன்நிறுத்திப் பேச முக்கிய விசயமும் இத்தேர்தலில் இல்லை. வென்றாலும் தோற்றாலும் இந்த ஓட்டுப் பொறுக்கிகள் எதையும் இழக்கப் போவதில்லை; எந்தக் கூட்டணி வென்றாலும் தமிழக மக்கள் எதையும் பெறப்போவதுமில்லை.



● வசந்தன்



படிப்பகம்

www.padippakam.com

# 'மார்க்சிஸ்டு'களைக் கவிழ்த்த மன்மோகன் சிங்

**கா**ங்கிரசு அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை போலி கம்யூனிஸ்டுகள் விலக்கிக் கொள்வார்களா? ''மன்மோகனுக்கு மார்க்சிஸ்டுகள் குடைச்சல்'', ''சிதம்பரத்துக்கு நமைச்சல்'', ''நாடாளுமன்றத்தில் புயலைக் கிளப்புவார்கள் இடதுசாரிகள்'' - என்பன போன்ற தலைப்புச் செய்திகளைப் படித்தால், அப்படி ஏதோ நடக்கப் போவதைப் போன்ற பிரமை ஏற்படத்தான் செய்கிறது. பிரமைகளை விடுத்து நாம் உண்மைகளைப் பரிசீலிப்போம்.

கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் போலி கம்யூனிஸ்டுகளின் ஆசி பெற்ற இந்த 'மதச்சார்பற்ற', ஐக்கிய முற்போக்கு ஏலக்கம்பெனி சாதித்தது என்ன?

தொலைபேசி, வங்கி, காப்பீடு ஆகிய துறைகளில் பன்னாட்டு நிறுவனங்கள் என்ன கோரினார்களோ, அவற்றைச் செய்து கொடுத்திருக்கிறது காங்கிரசு அரசு. நவரத்தினக் கம்பெனிகளைப் பாதுகாப்பது என்ற பெயரில், 'மற்றெல்லா பொதுத்துறை நிறுவனங்களையும் தனியார்மயமாக்கிக் கொள்ளலாம்' என்று சிதம்பரத்துக்கு புரோநோட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள். சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் பன்னாட்டு நிறுவனங்கள் தம் விருப்பம் போல சட்டமியற்றிக் கொண்டு 'கும்பினியாட்சி' நடத்திக் கொள்ளவும் காங்கிரசு அரசு அனுமதித்திருக்கிறது. விரைவிலேயே எல்லா தொழிலாளர் சட்டங்களையும் ரத்து செய்யவிருப்பதாக மன்மோகன் சிங்கும், ஓய்வூதிய நிதியைப் பன்னாட்டு முதலாளிகள் வசம் ஒப்படைக்கவிருப்பதாக சிதம்பரமும் போலி கம்யூனிஸ்டுகளுக்கு நோட்டீசு கொடுத்துள்ளனர்.

'மார்க்சிஸ்டு'களின் மனங்கவர்ந்த குறைந்தபட்ச பொதுத்திட்டத்தை பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி, வெளியுறவுத் துறையிலும் கந்தலாக்கி வருகிறது மன்மோகன் அரசு. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இந்திய இராணுவத்தை அதன் காலாட்படையாக மாற்றும் இந்தோ-அமெரிக்க இராணுவ ஒப்பந்தமும், இந்திய அணு ஆய்வுகளை அமெரிக்கா சோதனையிட வாய்ப்பளிக்கும் இரகசிய ஒப்பந்தமும் மன்மோகன் அரசால் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் கையெழுத்தான அந்த இரகசிய ஒப்பந்தங்களின் விவரங்களை வெளியிடுமாறு 'மார்க்சிஸ்டு'கள் பலமுறை கதறிவிட்டார்கள்; காங்கிரசு அரசோ அதைச் சட்டை செய்யக்கூட இல்லை.

இரான் விவகாரத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் சண்டியர்தனத்தை விஞ்சுகிறது 'மார்க்சிஸ்டு'கள் அரங்கேற்றும் ''காமெடி'' நாடகம். அமெரிக்காவின் ஆணைப்படி சர்வதேச அணுசக்தி ஏஜென்சியில் இரானுக்கு எதிராக வாக்களித்தது காங்கிரசு அரசு. ''அடுத்த முறை இப்படி வாக்களித்தால் விளைவுகள் மோசமாக இருக்கும்'' என்று எச்சரிக்கை செய்தார் 'மார்க்சிஸ்டு' தலைவர் பிரகாஷ் காரத். இரண்டாவது முறையும் அவ்வாறே வாக்களித்தது காங்கிரசு அரசு. ''மூன்றாவது முறையும் இப்படி வாக்களித்தால் நாடாளுமன்றத்தில் இதற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும்'' என்று கடைசியோ கடைசியாக எச்சரிக்கை செய்திருக்கிறது, 'மார்க்சிஸ்டு' கட்சி.

''இந்த முறை உண்மையிலேயே கவிழ்த்து விடுவார்கள் போலிருக்கிறது'' என்று யாரும் கனவு காண வேண்டாம். விமான நிலையங்கள் தனியார்மயம் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானமாம்! சில்லறை வணிகம் மற்றும் இரான் பிரச்சினை குறித்து ஓட்டெடுப்பு நடத்தவே தேவையில்லாத விதி எண் 173-இன் கீழ் விவாதமாம்! ''கம்யூ. மிரட்டல்,



ஐக்கிய முற்போக்கு கூட்டணி - இடதுசாரிக் கட்சிகளிடையே நடந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு நெருக்கமாக இணைந்து திரும்பும் நிதியமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் சி.பி.எம்.இன் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சீத்தாராம் யெச்சூரி.



படிப்பகம்



சென்னையில் நடந்த கியூபா ஆதரவு மாநாட்டில் தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன் சி.பி.எம்.இன் பொதுச் செயலர் பிரகாஷ் காரத் (இடமிருந்து இரண்டாவது): புதுத் தரகு முதலாளியாக வளர்ந்துவிட்ட கருணாநிதியிடம், என்ன அமெரிக்க எதிர்ப்புத் தன்மையை சி.பி.எம். கண்டுபிடித்துவிட்டது?

குடைச்சல்'' போன்ற செய்திகளின் உண்மைச் சொரூபம் இது தான்!

பாரதிய ஜனதா எனும் பேரபாயத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காகத்தான் காங்கிரசு அரசை ஆதரிப்பதாகவும், மற்றபடி தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்துவதில் இரண்டு கட்சிகளுக்கும் எவ்வித வேறுபாடு இல்லையென்பது தங்களுக்குத் தெரியுமென்றும் கூறிப் புன்னகைக்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள். இவ்வாறு கூறுவதன் மூலம் மதவெறி எதிர்ப்பாளன் என்ற மணி மகுடத்தை இவர்கள் மன்மோகனுக்குச் சூட்டுகிறார்கள். நாடே அமெரிக்காவுக்கு அடிமையாவதைக் கூடச் சகித்துக் கொள்ளும் அளவுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்து மதவெறிக்கு எதிராக காங்கிரசு எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகள் என்னவென்பதை 'மார்க்சிஸ்டு'கள் நமக்குத் தெரிவிக்க வேண்டும்.

குஜராத் படுகொலை வழக்குக்ளை விசாரிக்கச் சொல்லி உச்சநீதி மன்றம் தான் உத்தரவு பிறப்பித்துள்ளதேயன்றி காங்கிரசுக் கட்சி அது குறித்து வாய் திறக்கக்கூட இல்லை. மும்பை படுகொலை, அயோத்தி பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்கள் பாதுகாப்பாகத் தூங்குகின்றன. ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள் முதலான பயங்கரவாத அமைப்புகள் தடை செய்யப்படவில்லை. குஜராத் படுகொலை குறித்த கே.ஆர்.நாராயணனின் கடிதத்தை வெளியிட மறுப்பது, நானாவதி கமிசன் விவகாரம், மதக்கலவரத் தடுப்புச் சட்டம் என்ற பெயரில் அரசு எந்திரத்திற்கு வரம்பற்ற அதிகாரம் வழங்குவது... ஆகியவை தான் காங்கிரசு அரசின் மதவெறி எதிர்ப்பு சாதனைகள். கல்வி, கலாச்சாரத் துறைகளில் 'முற்போக்காளர்கள்' எனப்படும் சிலருக்கு பதவி வழங்கியிருப்பதற்கு மேல் ஒரு வெங்காயமும் நடக்கவில்லை.

தனது உட்கட்சிப் பூசல்கள் மற்றும் ஊழல்களால் நாறிப் போயிருக்கும் பாரதிய ஜனதா கட்சி, காங்கிரசு மீதான அதிருப்தியை அறுவடை செய்வதற்காகக் காத்திருக்கிறது. இந்துத்துவ அரசியலையும் இராமன் கோயிலையும் வைத்து இரண்டு ஓட்டுகூட வாங்க முடியாது என்று உணர்ந்திருப்பதனால் தற்போது அமைதி காக்கிறதேயன்றி, காங்கிரசின் மதவெறி எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக அது முடக்கப்பட்டு விடவில்லை. பார்ப்பன மதவெறியின் வர்க்கத் தன்மையில் ஏகாதிபத்திய கைக்கூலித்தனம் அழுத்தமாகப் பதிக்கப்பட்டுள்ளது.

மறுகாலனியாதிக்கத்தையும் மதவெறியையும் தமது தேர்தல் அரசியலின் சந்தர்ப்பவாதத்துக்காக இரண்டாகப் பிரித்துக் கொண்டு ஒரு பிரிவுடன் கூட்டு வைத்துக் கொள்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள். ஆனால், அவர்களோ அவசியமான தருணங்களிலெல்லாம் ஒருவருக்கொருவர் கைகொடுத்துக் கொள்கிறார்கள். அன்று 'காட்' ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற நரசிம்மராவுக்கு துணை நின்றார் அத்வானி. அயோத்தி மசூதியை இடிக்க அத்வானிக்கு உதவினார் ராவ். இன்று இரான் பிரச்சினையில் உடுக்கை இழந்தவன் கை போல காங்கிரசுக்கு உதவ வருகிறது பாரதிய ஜனதா. எவ்விதக் 'குறைந்த பட்ச திட்டமும்' இல்லாமலேயே இவர்களுக்கிடையில் உருவாகும் இந்த கொள்கைக் கூட்டணி பற்றி 'மார்க்சிஸ்டு'கள் வாய் திறப்பதில்லை. ஏனென்றால், காங்கிரசுக்கு இவர்கள் அணிவித்திருக்கும் மதசார்பின்மைக் கோவணத்தை ஆத்திரப்பட்டு உருவி விட்டால், அதன் விளைவாக தாங்கள் தான் முதலில் அம்மணமாக நேரிடும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

ஆகவே, மதச்சார்பின்மையைக் காப்பாற்றுவதற்காகத்தான் மன்மோகன் சிங்கின் மறுகாலனியாக்கக் கொள்கைகளைச் சகித்துக் கொள்ள வேண்டியிருப்பதாக 'மார்க்சிஸ்டு'கள் கூறும் காரணம் பொய்யானது. மாறாக, தனியார்மய - தாராளமயக் கொள்கைகளில் தாங்கள் கொண்டிருக்கும் உடன்பாட்டை மறைப்பதற்காகத் தான் 'மதச்சார்பின்மை' எனும் கோவணத்தை இவர்கள் காங்கிரசுக்கு அணிவித்திருக்கிறார்கள். தி.மு.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகள் பாரதிய ஜனதா அரசுக்கு மதச்சார்ப்பற்ற முகமூடிகளாகப் பயன்பட்டதைப் போல, மன்மோகன் சிங்கின் மறுகாலனியாக்க நடவடிக்கைகளுக்கு 'மனிதமுகம்' வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள்.

''பொதுத்துறையைத் தனியார்மயமாக்கலாம், ஆனால், தொழிலாளிகளுக்கு வேலை உத்திரவாதம் வேண்டும்; விவசாயத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கலாம்; ஆனால், அளவோடு இருக்க வேண்டும்; சில்லறை வணிகத்தில் பன்னாட்டு முதலீட்டை அனுமதிக்கலாம்; ஆனால், சிறு வணிகர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்'' - இதுதான் மனித முகத்துக்கான விளக்கம். அதாவது, ''தூக்கு தண்டனையை நிறைவேற்றலாம்; ஆனால், பல கையை மெதுவாக இழுக்க வேண்டும்'' என்பதுதான் போலி கம்யூனிஸ்டுகளின் உலகமயமாக்கல் எதிர்ப்புக் கொள்கை. 'வங்கத்து சிதம்பரம்' புத்ததேவ் பட்டாச்சார்யாவின் தனியார்மய ஆதரவு சண்டமாருதங்களைப் படித்திருக்கும் வாசகர்களுக்கு இது விசயத்தில் அதிக விள்க்கம் தேவையில்லை.

அமெரிக்க - இந்திய இராணுவ ஒப்பந்தம் போன்ற அடிமை ஒப்பந்தங்களில் இரகசியமாகக் கையெழுத்திட்டிருந்த போதிலும், பா.ஜனதாவுக்கு இடம் கொடுத்து விடக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காகத்தான் மன்மோகன் சிங்கின் மத்திய அரசை



படிப்பகம்

www.padippakam.com

ஆதரிப்பதாகக் கூறுகிறார்கள் 'மார்க் சிஸ்டு'கள். அப்படியானால் தங்களுடைய சொந்த ஆட்சி நடக்கும் மே.வங்கத்தில் அமெரிக்க இராணுவம் பயிற்சிக்கு வந்திறங்கிய போது, ''எங்கள் மாநிலத்தில் அமெரிக்க இராணுவம் கால் வைக்க அனுமதிக்க மாட்டோம்'' என்று புத்ததேவ் முழங்கியிருக்கலாமே! மிஞ்சிப் போனால் மே.வங்க அரசை மன்மோகன் சிங் ''டிஸ்மிஸ்'' செய்திருக்கக் கூடும். ஆனால், அதனைப் பயன்படுத்தி ஒரு மாபெரும் அமெரிக்க எதிர்ப்பு மக்கள் இயக்கத்தை நாடெங்கும் எழுப்பியிருக்கலாமே! மகூதி இடிப்புக்காக மாநில அரசாங்கங்களை இழக்கத் துணிந்த பார்ப்பன பாசிஸ்டுகளின் 'கொள்கைப்பற்று' கூட மார்க்சிஸ்டுகளிடம் இல்லாமல் போனதேன்? கியூபாவுக்கு ஆதரவுக் கூட்டமும் வெனிசூலாவின் சாவேஸுக்கு வரவேற்பு விழாவும் நடத்திவிட்டு அமெரிக்க இராணுவத்துக்கும் சலாம் போடும் இந்த சந்தர்ப்பவாதத்துக்குக் காரணம் என்ன? மதச்சார்பின்மையா?

'மார்க்சிஸ்டு' தலைவர்களை இத்தகைய கேள்விகளால் அசைத்து விட முடியாது. ''ஒரு மத்திய அரசுக்கு மாநில அரசு கட்டுப்படவில்லையென்றால் தேசிய ஒருமைப்பாடு என்னாவது, அரசியல் சட்டம் என்னாவது'' என்பதுதான் அவர்கள் கவலை. ஏனென்றால், இவர்கள் மன்னனை விஞ்சிய ராஜ விசுவாசிகள். நரசிம்மராவ் அரசு நாடாளுமன்றத்துக்கே தெரியாமல் ''காட்'' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. மன்மோகன் அரசும் அதே வழியில் இரகசியமாக அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது; இரானுக்கு எதிராக வாக்களித்திருக்கிறது. ஆளும் வர்க்க கட்சித் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, பன்றிகளுக்கு உரிய மரியாதையைக் கூட வழங்குவதில்லை. ஜனநாயகத்தின் மேன்மை குறித்து 'நற்செய்தி' வழங்க நேரும் 'குடியரசு' தினம் போன்ற 'நல்ல' நாள், 'பெரிய' நாளில் மட்டும்தான் அவர்கள் சரக்கடித்து விட்டுச் சாமியாடுகிறார்கள். 'மார்க்சிஸ்டு'களோ, நாடாளுமன்றக் கோயிலில் அன்றாடம் விரதமிருந்து மருள் வந்து சாமியாடுகிறார்கள்.

இரான் பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டால், ''குடியரசுத் தலைவர் உரைக்கு பிரதமர் நன்றி தெரிவித்துப் பேசிய பின்னர்தான் அனுமதிப்பேன்'' என்று கூறி உட்காரச் சொல்கிறார் சபாநாயகர் சாட்டர்ஜி. மரபின் மீதுதான் எத்தனை பக்தி! 'மார்க்சிஸ்டு'களின் கையில் மணியைக் கொடுத்து சபாநாயகராக உட்கார வைத்திருக்கிறார்கள் என்றால் காங்கிரசுக்காரர்களுக்கு அவர்கள் மீது எவ்வளவு நம்பிக்கை இருக்கவேண்டும்!

இந்திய இராணுவத்தை அமெரிக்காவின் அடியாள் படையாக மாற்றவும், இந்திய மண்ணில் அமெரிக்க இராணுவம் பயிற்சி எடுக்கவும், இந்திய அணு ஆய்வுகளை அமெரிக்கா சோதனையிடவும் அதிகாரம் தரும்



**'உலகமயமாக்கலைத் தடுக்க முனைவது மடமை' என்று புத்ததேவ் பட்டாச்சார்யா தெளிவாகவே கூறியிருக்கிறார். தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் தவிர்க்க முடியாதவை என்பதில் கொள்கைரீதியில் உடன்படுகின்ற அதேநேரத்தில், அவற்றை எவ்வாறு திணிப்பது என்கிற விசயத்தில்தான் மன்மோகன் சிங்குடன் 'மார்க்சிஸ்டு'கள் வேறுபடுகிறார்கள்.**

ஒரு அடிமை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டு, புஷ்ஷின் ஆணைப்படி இரானுக்கு எதிராக ஓட்டும் போட்டிருக்கும் இந்தக் கயமையைக் கேட்ட மாத்திரத்தில் நாடாளுமன்றமென்ன, நாடே தீப்பிடித்திருக்க வேண்டும். ஆனால் மரபு என்று சொல்லி மணியடிக்கிறார் 'மார்க்சிஸ்டு' சபாநாயகர். இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தொடர்ந்து அத்துமீறித் தலையிட்டு வரும் அமெரிக்க தூதர் மல்போர்டை திரும்பப் பெறுமாறு மத்திய அரசு அமெரிக்காவைக் கோர வேண்டும் என்று குரலெழுப்புகிறார்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள். ''கடுமையான சொற்களால் எலும்பை நொறுக்கிவிட முடியாது. அமெரிக்கா நமது நேச நாடு என்பதை மனதில் வைத்து வார்த்தைகளை அளந்து பேசுங்கள்'' என்று பதறுகிறார் சோம்நாத் சாட்டர்ஜி. மரபுக்கு மணியடிக்கும் இந்தப் பூசாரிகள் மன்மோகன் சிங் அரசைக் கவிழ்த்து விடுவார்களென்று யாராவது கனவு காணவும் முடியுமா?

தமது அரசியல் மொண்ணைத்தனத்துக்குப் பொருத்தமான வகையில் தங்களால் வழிநடத்தப்படும் தொழிலாளி வர்க்கத்தையும் சட்டவாதத்தில் தேய்த்துத் தேய்த்து முனை மழுங்க வைக்கிறார்கள் போலிகள். டெல்லி, மும்பை விமான நிலையங்கள் தனியார்மயத்திற்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தை கோரிக்கை நிறைவேறாமலேயே திரும்பப் பெற்று, போராடிய தொழிலாளர்களைச் சோர்வடையச் செய்தார்கள். ''போராடியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை இல்லை'' என்பதையே மாபெரும் சாதனையாகச் சித்தரித்ததுடன், தங்களது கருத்தை வலிமையாகப் பதிவு செய்து விட்டதாகப் பெருமை பேசினார்கள். வேலை நிறுத்தத்தினால் முதலாளி வர்க்கத்துக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு வருத்தம் தெரிவித்தன் மூலம் தங்களது கட்சியின் கருத்தை மேலும் வலிமையாகப் பதிவு செய்து விட்டார் மே.வங்க முதல்வர் புத்ததேவ்.

வெற்றிகரமாக முன்னேறி வந்த இப்போராட்டத்தை போலிகள் அவசரமாகக் கவிழ்க்கக் காரணம், அதன் போர்க்குணம்தான். ஊழியர்களே இல்லாமல் அதிகாரிகளையும் விமானப் படையையும் வைத்து சேவையை நடத்த முடியாமல் தடுமாறியது அரசு. இந்நிலை நீடித்து நாடு முழுவதும் போராட்டம் பரவினாலோ, கோபம் கொண்ட தொழிலாளர்கள் சேவையை நிறுத்த சட்டவிரோத வழிமுறைகளை மேற்கொள்ளத் தொடங்கினாலோ காங்கிரசு அரசின் கொடூர முகம் வெளிப்பட்டிருக்கும்; போலி கம்யூனிஸ்டுகளோ ஆளும் வர்க்கத்தின் கோபத்தை எதிர்கொள்ள நேர்ந்திருக்கும். அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு தொழிலாளிகளைத் தூண்டியதற்காக மே.வங்க முதல்வர் அந்நிய முதலாளிகளுக்கு பதில் சொல்ல வேண்டி வந்திருக்கும். பதவி, பந்தா, கார், கட்சி, ஆபீசு, ஊடகங்களின் விளம்பரம் ஆகிய அனைத்தையும் இழந்து



படிப்பகம்

www.padippakam.com

**“இடதுசாரிகள்தான் இந்த அரசின் மனச்சாட்சி” என்கிறார், ப.சிதம்பரம். மன்மோகன் சிங்கின் இதயத்தில் மனச்சாட்சியாக அமர்ந்து கொண்டு மறுகாலனியாக்கத்தின் மனித முகத்திற்கு மேக்கப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், ‘மார்க்சிஸ்டு’கள்!**

கம்யூனிஸ்டுகளுக்குரிய இடத்திற்கு அவர்கள் வந்து சேர வேண்டி இருந்திருக்கும். இரண்டு நாள் சிரமத்திற்காக முதலாளிகளிடம் மன்னிப்பு கேட்கும் முதல்வரைக் கொண்ட கட்சி இவற்றுக்கெல்லாம் எப்படித் தயாராக இருக்கும்?

தனியார்மயம் - தாராளமயத்திற்கு எதிரான போராட்டங்களைத் தீவிரப்படுத்தினால் ஹோண்டா தொழிலாளர் மீதான தாக்குதல், கலிங்காநகர் துப்பாக்கிச் சூடு போன்ற அடக்குமுறைகளும் தொடரும். இவற்றை எதிர்கொள்வதற்கான மாற்று வழிமுறைகளைப் பற்றியும் தொழிலாளி வர்க்கம் சிந்திக்கத் தொடங்கும். ஆகவேதான், தமது நாடாளுமன்ற அரசியலுக்குத் தோதான வரம்பிற்குள் மக்கள் போராட்டங்கள் அனைத்தையும் முடக்குகிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள். ''நாளை முதல் நாடே அமெரிக்காவின் அடிமை'' என்று மன்மோகன் சிங் அறிவித்தால் கூட போலி கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றத்தை விட்டு வெளியே வந்து விடுவார்கள் என்று சொல்ல முடியாது. 'நாடாளுமன்றத்தைக் கலக்காமல் தன்னிச்சையாக இப்படியொரு அறிவிப்பை பிரதமர் வெளியிட்டதற்காக' உரிமைப் பிரச்சினையோ கவன ஈர்ப்புத் தீர்மானமோதான் கொண்டு வருவார்கள்.

இது நகைச்சுவையல்ல,உண்மை. நடப்பது உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சி என்பதும் இதில் நாடாளுமன்றம் ஒரு பொம்மை என்பதும் உலகறிந்த உண்மைகள். இந்த மறுகாலனியாக்கத்தை தேர்தல் அரசியல் மூலம் தடுத்து விடலாம் என்று கூறுவது, புஷ்ஷை கைது செய்யச் சொல்லி நம் ஊர் போலீசு ஸ்டேசனில் கம்ப்ளெயிண்ட் கொடுக்கலாம் என்று கூறுவதற்கு நிகரானது. போலிகள் இதைத்தான் சொல்கிறார்கள். ஏனென்றால், மறுகாலனியாக்கத்தை முறியடிப்பதோ நாட்டின் இறையாண்மையை நிலைநாட்டுவதோ அவர்களுடைய நோக்கமல்ல. 'உலகமயமாக்கலைத் தடுக்க முனைவது மடமை'.என்று புத்ததேவ் பட்டாச்சார்யா தெளிவாகவே கூறியிருக்கிறார். அப்படியானால் போலி கம்யூனிஸ்டுகள் காட்டி வரும் எதிர்ப்புகளின் பொருள்தான் என்ன? தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் தவிர்க்க முடியாதவை என்பதில் கொள்கைரீதியில் உடன்படுகின்ற அதேநேரத்தில், அவற்றை எவ்வாறு திணிப்பது என்கிற விசயத்தில் மன்மோகன் சிங்குடன் அவர்கள் நடைமுறையில் வேறுபடுகிறார்கள்.

போராட்டக் களத்தில் தம் பின்னே திரண்டிருக்கும் தொழிலாளிகளிடம் மாபெரும் தனியார்மய எதிர்ப்பாளர்கள் போல வீரமுழக்கமிடுகிறார்கள். சிதம்பரத்தின் வேட்டி சட்டையை உருவப் போவது போலச் சவடால் அடிக்கிறார்கள். பிறகு, தொழிலாளி வர்க்கம் தயாராக இல்லாததனால்தான் போராட்டத்தை தீவிரப்படுத்த முடியவில்லை என்று அவர்கள் மீதே பழி போடுகிறார்கள். ''தனியார்மயத்தைத் தடுத்து நிறுத்த முடியாது'' என்ற தங்களுடைய கருத்தை தொழிலாளிகளிடம் வெளிப்படையாகக் கூறாமல், போராட்டங்களின் தொடர் தோல்வியின் ஊடாக அவர்களே பட்டுத் தெரிந்து கொள்ளுமாறு விட்டுவிடுகிறார்கள்.

மறுகாலனியாக்க எதிர்ப்புப் போராட்டங்களின் அரசியல் கூர்மையை முன்னை மழுங்கச் செய்வதும், விடுதலைப் போராட்ட உணர்வுக்கு உயர்த்தப்பட வேண்டிய மக்களை, தமது சொந்த வாழ்க்கையை எவ்வாறேனும் பாதுகாத்துக் கொள்ளும் உணர்வு நிலைக்குத் தாழ்த்துவதும் தான் போலிகள் நடத்தி வரும் போராட்டங்களின் சாரம். ஆனால், தமது இந்த ஐந்தாம் படை வேலையை செயற்கரிய சாதனையாக அவர்கள் கருதுகிறார்கள். சில சலுகைகளையும் வாக்குறுதிகளையும் காட்டி, மறுகாலனியாக்கத் தாக்குதலின் கூர்முனையை மழுங்கச் செய்து விட்டதாக மக்களிடம் பீற்றிக் கொள்கிறார்கள். தாங்கள் மட்டும் இல்லையென்றால் நிலைமை இன்னும் மோசமாக இருந்திருக்கும் என்று அச்சுறுத்துகிறார்கள். இதே உண்மையை இலக்கிய நயத்துடன் எடுத்துச் சொல்கிறார் ப.சிதம்பரம் ''இடதுசாரிகள்தான் இந்த அரசின் மனச்சாட்சி''என்கிறார். அன்று மனித முகத்துடன் கூடிய மதவெறியை வாஜ்பாயிடம் கண்டுபிடித்தது தி.மு.க.! 'மார்க்சிஸ்டு'களோ இன்று மன்மோகன் சிங்கின் இதயத்தில் மனச்சாட்சியாக அமர்ந்து கொண்டு மறுகாலனியாக்கத்தின் மனித முகத்திற்கு மேக்கப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, ஆட்சியதிகாரத்தில் மதவெறி அமருவதைத் தடுக்கும் பொருட்டுத்தான் மன்மோகன் அரசை ஆதரிக்கும் நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்பட்டிருப்பதாக 'மார்க்சிஸ்டு'கள் கூறுவது பொய். ஒருவேளை பா.ஜனதா என்ற கட்சியே அரசியல் அரங்கில் இல்லாமல் இருந்திருந்தால் கூட இவர்கள் என்ன செய்திருப்பார்கள்? காங்கிரசுக்கு எதிராக முலாயம், லாலு போன்றோருடன் கூட்டணி அமைத்திருப்பார்கள். ஒரு ஆளும் வர்க்கப் பிரிவுக்கு எதிராக இன்னொரு பிரிவுடன் கூட்டு சேர்ந்து கொள்வதுதான் இவர்களின் (திரிபுவாத கம்யூனிஸ்டுகளின்) பாரம்பரியம்.

இப்போது கூட அமெரிக்க அடிவருடியாகச் செயல்படும் காங்கிரசை வழிக்கு கொண்டு வருவதற்கு முலாயம், லாலு, கருணாநிதி, தேவேகவுடா போன்ற ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைக் குன்றுகளைக் காட்டித்தான் மன்மோகன் சிங்கை இவர்கள் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

'முன் விட்டை முற்போக்கு, பின் விட்டை பிற்போக்கு' என்று பிரித்துக் கூட்டணி அமைக்கும் இந்தப் பாரம்பரியத்திற்கும் இப்போது ஆபத்து வந்து விட்டது. கொள்கை உடன்பாடு என்ற கருத்தாக்கமே காலாவதியாகி, தொகுதி உடன்பாடு என்பது மட்டுமே தேர்தல் அரசியலில் எஞ்சி நிற்கிறது. ''1991 முதல் எங்கள் நாட்டில் 6 ஆட்சிகள் மாறியுள்ளன; ஆனால், தாராளமயக் கொள்கையை யாரும் மாற்றவில்லை; கம்யூனிஸ்டுகள் பன்னாட்டு மூலதனத்தை அறைகூவி அழைப்பதைக் காண வேண்டுமா, மே.வங்கத்தைப் பாருங்கள்!'' என்று மலேசிய முதலாளிகள் சங்கத்தில் பேசியிருக்கிறார், மன்மோகன் சிங்.

உண்மை இவ்வாறு இருப்பினும், கையில் செங்கொடியை வைத்திருக்கும் வரை தங்களுக்கு ஒரு கொள்கை இருப்பதாகக் கூறிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் போலி கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கிறது. எனவே, காலத்திற்கேற்ற இடதுசாரிக் கொள்கையைத் தேடி மெள்ள வலது பக்கம் நோக்கி நகர்கிறார்கள். தாங்கள் இதுகாறும்


படிப்பகம்

www.padippakam.com

வலதுசாரி என்று வறட்டுத்தனமாகக் கருதிக் கொண்டிருந்த வாஜ்பாயிடம் கூட இடதுசாரிக் கூறுகள் இருப்பது இந்தப் புதிய ஒளியில்தான் அவர்களுக் குத் தெரியவருகிறது.

இராக்கிற்கு இந்திய துருப்புகளை அனுப்புமாறு புஷ் நிர்ப்பந்தித்தபோது, வாஜ்பாய் எப்படி முற்போக்காக நடந்து கொண்டாரென்பதை மன் மோகன் சிங்கிற்கு விளக்கியிருக்கிறார் ஏ.பி.பரதன். ''தோழர்களே, இராணு வத்தை அனுப்பக் கூடாது என்று சவுண்டு கொடுங்கள்; நீங்கள் போடும் சத்தம் வாஷிங்டனை எட்டவேண்டும். அப்போதுதான் உங்கள் எதிர்ப்பைக் காட்டி புஷ்ஷிடமிருந்து நான் எஸ்கேப் ஆக முடியும்'' என்று பரதனுக்கு ஐடியா கொடுத்தாராம் வாஜ்பாய். ''பாரதிய ஜனதா அளவுக்காவது முற்போக்காக நடந்து கொள்ளுங்கள்'' என்று காங்கிர சிடம் கெஞ்சியிருக்கிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள். (டெக்.கிரானிக்கிள் 15.2.06)

மன்மோகன் சிங்கோ பிளேட்டைத் திருப்பி விட்டார். வரவிருக்கும் கேரள, மே.வங்க சட்டமன்றத் தேர்தல்களில் முசுலீம் வாக்குவங்கியைக் குறி வைத் துத்தான் கம்யூனிஸ்டுகள் இரான் விவ காரத்தில் அமெரிக்காவை எதிர்க்கிறார் கள் என்று தன்னுடைய அமெரிக்கக் கைக்கூலித்தனத்திற்கு இந்து முலாம் பூசிக் கொண்டு விட்டார். மார்க்சிஸ்டுக ளுக்கு மதவாத முத்திரையும் குத்திவிட் டார். போலி கம்யூனிஸ்டுகளோ ''ஒரு பிரதமர் இப்படிப் பேசலாமா?'' என்று புலம்புகின்றனர்.

''இசுலாமிய சக்திகளுக்கு எதிரான போரில் இந்து இந்தியா, அமெரிக்கா வின் நட்பு சக்தியாக இருக்கும்'' என்று முன்னர் அசோக் சிங்கால் பிரகடனம் செய்தாரே, அதற்கும் மன்மோகன் சிங் கின் இந்தக் கூற்றுக்கும் என்ன வித்தியா சம்?

தன்னுடைய அமெரிக்கக் கைக் கூலித்தனத்திற்கு இந்து முலாம் பூசிக் கொள்ளும் காங்கிரசு, மதச்சார்பற்ற கட்சிதான் என்று 'மார்க்சிஸ்டு'கள் நமக்கு நிரூபிக்க வேண்டும்.

அமெரிக்காவை எதிர்த்த போதி லும் தாங்கள் மதச்சார்பற்றவர்கள்தான் என்று மன்மோகன் சிங்கிற்கு வேறு அவர்கள் நிரூபித்துக் காட்ட வேண் டும்.

என்ன ஆச்சரியம்! மன்மோகன் சிங் அரசை 'மார்க்சிஸ்டு'கள் கவிழ்த்து விடுவார்கள் என்ற பரபரப்புச் செய்தி கள் அடங்குவதற்கு முன்பே, மன் மோகன் சிங் அல்லவா 'மார்க் சிஸ்டு'களைக் கவிழ்த்திருக்கிறார்!

● பாலன்

## வாசகர் கடிதம்

● கோக்கின் தலைமையிடமான அமெ ரிக்காவில் பல்கலைக்கழக மாணவர் கள் கோக்கிற்கு கொடுத்த அடியும், நெல்லையில் கங்கைகொண்டான் கிராமசபைக் கூட்டத்தில் கோக்கின் அதிகாரத் திமிருக்கு விழுந்த செருப்ப டியும் அமெரிக்க எதிர்ப்புணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சுகின்றன. விவசாயி களை மேலும் போண்டியாக்கி நடுத்தெ ருவுக்குத் தள்ளும் ஒப்பந்த விவசாயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்கை யின் கோரத்தை பஞ்சாபின் படிப் பினை எடுப்பாக உணர்த்துகிறது.

- புரட்சித்தூயன், தருமபுரி.

● அட்டைப்படம் நெஞ்சை உலுக்கி யது. நாட்டைப் பட்டினிச்சாவு எனும் பேரபாயம் சூழ்ந்துள்ளதை அதிர்ச்சி யூட்டும் புள்ளி விவரங்களுடன் அட் டைப்படக் கட்டுரை எடுப்பாக விளக்கி யது. பு.ஜ. இதழைப் படிக்கும்போது நாமும் போராட வேண்டும் என்ற உணர்வுதான் எப்போதும் பொங்குகி றது.

- பழனிசாமி, சேலம்.

● பா.ஜ.க. தலைவர்களும் முன்னணி யாளர்களும் இலஞ்ச ஊழலிலும் விபச் சாரக் களிவெறியாட்டத்திலும் ஈடுபடு வதற்கான அடிப்படை அக்கட்சியின் பாசிச சித்தாந்த பாரம்பரியத்திலேயே இருக்கிறது என்பதை ஆழமாக விளக் கிய கட்டுரை சிறப்பு. இந்தியாவின் அவலத்தை உணர்த்திய அட்டைப்பட மும் இதர கட்டுரைகளும் போராட்ட உணர்வூட்டுகின்றன.

- வாசகர்கள், திருப்பூர்.

● ''அடிமை + அடியாள் = வல்லரசு'' - சொரணையற்ற அமெரிக்க அடிமை யும் வட்டார அடியாளுமான இந்திய அரசின் தன்மையை விளக்கும் மிகப் பொருத்தமான கணக்கு சூத்திரம். அமெரிக்க மாணவர்களின் கோக் புறக் கணிப்பு இயக்கம், கொலைகார கோக் மட்டுமின்றி அனைத்து பன்னாட்டு நிறு வனங்களையும் குழிதோண்டிப் புதைக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தியது.

- ஜியே நேசன், குள்ளம்பட்டி.

● என்னைப் போன்ற பலருக்கு சங்கப் பரிவாரங்களின் தோற்றம், செயல்பா டுகள் பற்றிப் போதிய தெளிவில்லா மல் இருந்தது. ஆர்.எஸ்.எஸ். பற்றிய கட்டுரை இந்துவெறியர்களைப் பற் றிய முழுமையான பார்வையைக் கொடுத்தது. இதேபோன்று பிற அரசி யல் கட்சிகள் - அமைப்புகளைப் பற்றித் தொடர்ந்து வெளியிடுவது பய னுள்ளதாக அமையும்.

- யாழினி, சென்னை.

● உலக வங்கி உத்தரவால் மானியக் குறைப்பு உருவாக்கியுள்ள பேரழிவை புதிய வாசகரும் உணரும் வகையில் அட்டைப்படக் கட்டுரை அமைந் துள்ளது. எளிய நடையில் இதுபோன்ற கட்டுரைகளுடன் இதழ் வெளிவர வேண்டும்.

- ஜீவா, சென்னை.

● ''பரவிவரும் பட்டினிச் சாவுகள்'' கட் டுரையில், ''.... பஞ்சைப் பராரிகள் திரண்டு....'' என்று கையாளாமல் ''பஞ் சைப் பராரிகளாக ஆக்கப்பட்டவர்கள் திரண்டு'' என்று குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும். சுருக்கமாக வும், அதேநேரத்தில் செறிவாகவும் அமைந்த தலையங்கம், 'இந்திய நாட் டின் தலைநகர் இனி வாஷிங்டன்தான்!' என்பதை எடுத்துக் காட்டுகிறது.

- மணிகோ. பன்னீர்செல்வம், நாகம்பட்டி.

● நாட்டைச் சூறையாடி மக்களை மர ணப்படுகுழியில் தள்ளி வரும் மறுகால னியாக்கம், இந்தியாவைக் குப்பைத் தொட்டியாக மாற்றி வருவதை பிரெஞ்சு நச்சுக் கழிவுக் கப்பல் பற்றிய கட்டுரை உணர்த்துகிறது. ஏழைகளை நகரங்களிலிருந்து விரட்டியடிக்கும் சதி யின் ஓர் அங்கம்தான் நகர்ப்புற புத்தாக் கத் திட்டம் என்பதை பு.ஜ. மூலம் தெரிந்து கொண்டோம். அட்டைப்ப டம் பட்டினிச் சாவின் அவலத்தையும் பேரபாயத்தையும் நெஞ்சிலே நிறுத்து கிறது.

- தமிழ்ச்செல்வி மற்றும் வாசகர்கள், பாடாலூர்.

● ''ஏழை நாடுகளின் சுற்றுச்சூழலை அழிப்பது யார்?'' என்ற கட்டுரை மூலம் ஏகாதிபத்திய சதிகளை அறிந்து அதிர்ச் சியடைந்தேன். நாடு சுடுகாடாக ஆக்கப் படுவதை எண்ணி வேதனையடைந் தேன். இதுபோன்ற உண்மைச் செய்தி களோடு, பெண் விடுதலை பற்றிய கட் டுரைகளையும் எதிர்பார்க்கிறேன்.

- வெண்மணி, திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

# ஓடப்பர் உதையப்பர் ஆகிவிட்டால்...

## வனத்துறை அதிகாரிகளைப் பணியவைத்த விவசாயிகளின் போராட்டம்

**வி**ருத்தாசலம் அருகில் உள்ள ஆலிச்சிக்குடி, க.இளமங்கலம் கிராமங்களின் விவசாயிகளுக்கு ஊருக்குத் தெற்கே, கருங்குழி காட்டோடைக்குத் தென்புறம் சுமார் 1000 ஏக்கர் நிலம் உள்ளது. விவசாயிகள் இந்த நிலங்களில் நெல்லும் கரும்பும் பயிரிட்டிருந்தனர்.

இந்த ஆண்டு வந்த பெருவெள்ளத்தில் அழிந்ததுபோக எஞ்சிய பயிரை விவசாயிகள் அறுவடை செய்ய முனைந்தபோது, வனத்துறையினர் காட்டுப்பாதை வழியே விவசாயிகள் நிலங்களுக்குச் செல்லக்கூடாது எனத் தடுத்தனர்; மீறிச் சென்றால், மரம் கடத்தியதாக வழக்குப் போடுவோம் என்று மிரட்டினர். விவசாயிகளுக்குத் தங்கள் நிலங்களுக்குச் செல்ல வேறு வழியேதும் இல்லாததால் வனத்துறையினரின் மிரட்டலையும் மீறிச் சென்றனர்.

இத்தருணத்தில் இக்காட்டைப் பார்வையிட வந்த மாவட்ட வன அதிகாரியிடம் விவசாயிகள் இப்பிரச்சினையை முறையிட்டனர். மாவட்ட வன அதிகாரியோ, ''தங்கள் அலுவலர்கள் சொன்னது சரிதான், மீறிச் சென்றால் உங்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்'' என்று மிரட்டியதோடு, 1.2.2006 முதல் அப்பாதையை முற்றாக மூடினார். இதனால் விளைச்சல், நிலத்திலேயே நாசமாகும் நிலை ஏற்பட்டது. சொற்ப விளைச்சலையும் இழந்து விடுவோமோ என்று அச்சத்தில் உழன்ற விவசாயிகளிடம் பேரத்தில் இறங்கியது மாவட்ட வன அதிகார வர்க்க கும்பல். ''எங்கள் உயரதிகாரிகள் காட்டைப் பார்வையிட வரும்போது, அவர்களுக்கு லாட்ஜ், சாப்பாடு, தண்ணி, பலானதெல்லாம் எங்கள் சம்பளத்தில் செலவு செய்ய முடியுமா?'' என்று பேரத்தை பச்சையாக வெளிப்படுத்தியது, வனத்துறை கும்பல்.

விவசாயிகள் இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணியிடம் முறையிட்டு, அதன் தலைமையில் கிராம கூட்டத்தைக் கூட்டினர்.

அதில், வனத்துறையின் அநீதியான செயலை எதிர்த்து போராட்டக்குழு அமைக்கப்பட்டது. அறுவடையைத் தடுத்து நிறுத்திய வனத்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தருமாறும் கோரியதோடு, 13.2.2006 அன்று பாரம்பரிய காட்டுப்பாதையை மீட்கும் போராட்ட அறிவிப்பும் குறிப்பிடப்பட்டு மாவட்ட சிவில் நிர்வாகத்துக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டன. வனத்துறையினரின் அநீதியை எதிர்த்து வீச்சான பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம், வனத்துறையின் பொய் வழக்கு -மிரட்டல் மக்களிடமும் அரசு எந்திரத்திடமும் அம்பலப்படுத்தப்பட்டது. பணம் கேட்டு காட்டுப் பாதையை மறித்த வனத்துறையின் செயல் பகுதி முழுக்க சந்தி சிரித்தது. அதிலும் உயரதிகாரிகளுக்கு லஞ்சம் பெற்றுத் தருவதோடு, 'மாமா' வேலையும் செய்யும் அலுவலர்களின் செயலை பிரசுரத்தில் வெளியிட்டதை கண்டு வனத்துறையினர் அதிர்ச்சியடைந்து செய்வதறியாது திகைத்தனர். காட்டுப்பாதையை மறிக்கும் தமது அடாவடிச் செயலை கைவிட்டு, பின்வாங்கி ஓடினர். போராடிய விவசாயிகளிடம் சமரசத்திற்குத் தூது விட்டனர். தெரிந்தவர்களிடத்திலெல்லாம் புலம்பித் திரிந்தனர்.

இவ்வாறு மாறிய, புதிய நிலைமைகளைப் பரிசீலிக்க மீண்டும் விவசாயிகளின் கூட்டம் கூட்டப்பட்டது. எதிர்பார்த்ததிற்கும் மேலாக வனத்துறையினரின் அடாவடிச் செயல்கள் அம்பலமாகி நாறுவதாலும், இதனால் போராட்டத்திற்கு முன்னரே கோரிக்கை நிறைவேறியதாலும், மீண்டும் பிரச்சினையின்றி அறுவடை தீவிரமாக நடைபெறுவதாலும் போராட்டம் நடத்துவது தற்காலிகமாக கைவிடப்பட்டது. ஆயினும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு மைய அரசின் ஒப்புதல் மூலமே கிடைக்கும் என்பதால், இப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்குரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



வி.வி.மு.வின் முறையான, போர்க்குணமான நடவடிக்கைகளின் மூலம் சில நாட்களிலேயே கிடைத்த இந்த வெற்றியால் அமைப்பின் மீதான விவசாயிகள் நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், உள்ளூர் ஓட்டுக்கட்சிகளின் பிரதிநிதிகளும், அரசு எந்திரத்தின் கையாளாகச் செயல்படும் ஆலிச்சிக்குடி ஊராட்சி மன்றத் தலைவரும் விவசாயிகளிடம் அம்பலப்பட்டுப் போயினர்.

*தகவல்:*
*விவசாயிகள் விடுதலை முன்னணி,*
*விருத்தாசலம் வட்டம்.*

---

தலையங்கம் தொடர்ச்சி

கையெழுத்திட்டுள்ளனர். சீனாவுக்கு எதிரான இராணுவத் தளமாகவும் அடியாளாகவும் இந்தியாவைப் பயன்படுத்துவதுதான் அமெரிக்கா வகுத்துள்ள ஆசியாவுக்கான போர்தந்திரத் திட்டம். அதற்கு விசுவாசமாகச் சேவை செய்து பிராந்திய வல்லரசாக - தெற்காசிய பேட்டை ரவுடியாக இந்தியாவை மாற்றுவதே ஆளுங்கும்பலின் நோக்கம்.

இவற்றை இறுதியாக்கி செயல்படுத்தும் தீர்மானத்தோடு அமெரிக்க அதிபர் இந்தியாவுக்கு வருகிறார். பயங்கரவாதத் தளபதி புஷ்ஷிற்கு ஒரு நாட்டின் தலைவருக்குரிய தகுதியோ, அறிவோ, பொறுப்போ அறவே கிடையாது என்பதை ஏகாதிபத்திய உலகத்தாலேயே மறுக்க முடியவில்லை. அமெரிக்காவிலேயே எந்த ஒரு அதிபரும் இந்த அளவுக்கு மக்களின் வெறுப்புக்கும் ஆளானதில்லை. தனது சொல்லிலும் செயலிலும் அமெரிக்க காட்டுமிராண்டித்தனத்தை அப்படியே பிரதிபலிக்கும் ஒரு மாஃபியா கும்பலின் தலைவன்தான் புஷ்!

கையில் மாலையுடன் அமெரிக்க அடிமைகள் இந்தக் கிரிமினல் பேர்வழியை வரவேற்கும் இந்த அவமானகரமான தருணத்தில், நமது மண்ணின் கௌரவத்தையும் காலனியாதிக்கத்தை எதிர்த்து விடுதலைப் போரில் உயிர் நீத்த ஆயிரமாயிரம் போராளிகளின் தியாகத்தையும் நிலைநாட்டும் வகையில், பயங்கரவாத புஷ்ஷிற்கு எதிரான போராட்டங்கள் நாடெங்கும் சுழன்று வீசட்டும்! பொங்கி எழட்டும் சுதந்திர வேட்கை! பொசுங்கி அழியட்டும் மறுகாலனியாதிக்கம்! •


படிப்பகம்

www.padippakam.com

## அமைதிப் பேச்சுவார்த்தை:

# முட்டுச்சந்தில் சிக்கிக் கொண்ட விடுதலைப் புலிகள்

நார்வே தூதரின் ஏற்பாட்டின்படி, சுவிஸ் நாட்டிலுள்ள ஜெனிவா நகரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே மீண்டும் அமைதிப் பேச்சு வார்த்தைகள் கடந்த பிப்ரவரி இறுதியில் நடந்துள்ளது. மூன்று ஆண்டுகளாக எவ்வித முன்னேற்றமுமின்றி முடங்கிக் கிடந்த நிலையில் தற்போது நடக்கும் பேச்சு வார்த்தை பெரிதும் எதிர்பார்ப்புக்குள்ளாகியுள்ளது.

புதிய அதிபர் மகிந்தா ராஜபக்சே தலைமையில் அமைந்துள்ள சிங்கள-பௌத்த இனவெறி பாசிசக் கூட்டணி அரசு, இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண விழையும் என்று எதிர்பார்ப்பது கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான். இருப்பினும் அமெரிக்கா உள்ளிட்டு ஏகாதிபத்திய நாடுகளின் நிர்ப்பந்தத்தால், இலங்கை அரசும் புலிகளும் ஏற்றுக் கொண்டு இப்பேச்சுவார்த்தை நாடகத்தை நடத்துகின்றனர். அமைதித் தீர்வு காண விழைவதாகக் கூறிக் கொண்டாலும், சிங்கள இனவெறி அரசு தொடர்ந்து போர் தயாரிப்புகளுக்கே முன்னுரிமை அளித்து வருகிறது. தற்போது அமலில் உள்ள போர் நிறுத்த உடன்பாட்டில் திருத்தம் செய்து தமது கையை மேலோங்கச் செய்ய முயற்சிக்கிறது.

மகிந்தா ராஜபக்சே பதவியேற்ற அடுத்த சில நாட்களிலேயே சிங்கள இராணுவம் ஈழத் தமிழர்கள் மீது தாக்குதல்களை நடத்தியது. சுனாமி நிவாரணப் பணியாளர்கள் சிங்கள இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்டனர். இவற்றுக்குப் பதிலடியாக, புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை நடத்தி 80-க்கும் மேற்பட்ட சிங்கள சிப்பாய்களைக் கொன்றொழித்தனர். இலங்கையில் மீண்டும் போர் மூளுமோ என்று அஞ்சி ஈழ மக்கள் தமிழகத்தை நோக்கி அகதிகளாக ஓடி வந்தனர்.

புலிகளை ஆத்திரமூட்டி மீண்டும் போரைத் திணித்து இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் உத்தியுடன் பாசிச ராஜபக்சே அரசு செயல்படுகிறது. அதற்குப் பக்கபலமாக இந்தியாவும் அமெரிக்காவும் வெளிப்படையாகவே ஆதரவளித்து நிற்கின்றன. தமிழீழக் கோரிக்கையை முற்றாக நிராகரிக்கும் இலங்கை அதிபர் ராஜபக்சே கடந்த டிசம்பர் இறுதியில் இந்தியாவுக்கு வந்தபோது, இலங்கையின் இராணுவத்தை வலுப்படுத்த போர்க் கருவிகளும் பயிற்சியும் தொடர்ந்து அளிக்கப்படும் என்று இந்திய அரசு உறுதியளித்துள்ளது. பன்னாட்டு பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றாக விடுதலைப் புலிகளைப் பட்டியலிட்டுள்ள அமெரிக்கா, ''இலங்கையில் போர் மூண்டால் நாங்கள் இராணுவ உதவி செய்து புலிகளை ஒடுக்குவோம்'' என்று தனது இலங்கைத் தூதர் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ''தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவிற்கு எதிரான சக்தி'' என்று தலைப்பிட்டு இந்து நாளேடு இந்திய அரசை உசுப்பிவிட்டு தலையங்கம் தீட்டுகிறது.

போர் நிறுத்தம் - பேச்சு வார்த்தை - அமைதித் தீர்வு ஆகிய வழிமுறைகளில் நம்பிக்கை வைத்துள்ள இலங்கை மக்களின் விருப்பத்திற்கு எதிராக நடந்து வரும் இச்சதிகளை முறியடிக்கும் வகையில், மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டியமைக்கும் முன்முயற்சியின்றி அரசியல் ரீதியில் புலிகள் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சாதிய - பிராந்திய வேறுபாடுகளால் கருணா தலைமையிலான புலிகளின் விலகல், ஈழத்தில் உள்ள இதர ஜனநாயக சக்திகளை முடமாக்கியதால் அரசியல் போராட்டங்களைக் கட்டியமைக்க முடியாத அவல நிலை, மலையகத் தமிழருடன் ஐக்கியமற்ற நிலை, தெற்கே முஸ்லீம் தமிழருடன் இணக்கமற்ற சூழல், சிங்கள உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டு இனவெறி பாசிச கும்பலைத் தனிமைப்படுத்த முன்முயற்சியின்மை - முதலானவற்றால் அரசியல் ரீதியில் புலிகள் முன்கை எடுக்கவோ, போராடவோ முடியாதபடி பின்னடைவுக்குள்ளாகி நிற்கின்றனர். தமது இராணுவ சாகசத்தாலும் ஏகபோக ஆதிக்கத்தாலும் சிங்கள இனவெறி பாசிஸ்டுகளை வீழ்த்திவிட முடியும் என்று இன்னமும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவின் தெற்கேயுள்ள

ஜெனிவா நகரில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதி அண்டன் எஸ்.பாலசிங்கம் (இடது) மற்றும் இலங்கை அரசின் பிரதிநிதி நிமல் சிறீபாலாடி சில்வா.





படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ள நிலையில், இந்தியாவின் வடக்கேயுள்ள நேபாளத்தில் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து மாவோயிஸ்டுகளும் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். ஆனால், அங்கே நிலைமை வேறாக உள்ளது.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மற்ற கட்சிகள் வேலை செய்வது பற்றி மாவோயிஸ்டுகள் அஞ்சுவதில்லை. மன்னராட்சிக்கு எதிராக இதர ஜனநாயக சக்திகளுடன் கூட்டாகப் போராட்டங்களை நடத்த முதலில் அழைப்பு விடுத்தவர்களும் மாவோயிஸ்டுகள்தான். மேலும், ஐ.நா. மன்றத்தின் மனித உரிமை அமைப்புகளுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வந்து தங்கி பார்வையிடவும், தமது கட்சிக் கிளைகளுடன் விவாதிக்கவும், தாம் சிறைப்படுத்தியுள்ள மன்னரது இராணுவத்துடன் பேசவும் எவ்விதத் தடையுமில்லை என்று அறைகூவல் விடுக்கின்றனர். தமது தவறுகளை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு, மீண்டும் அத்தகைய தவறுகள் நிகழ்ாதிருக்க உத்தரவாதம் தருவதன் மூலம் மாவோயிஸ்டுகள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். மாவோயிஸ்டுகளைப் புறக்கணிக்க முடியாத ஒரு அரசியல் சக்தியாக இதர கட்சிகளின் அணிகளே அவர்களது நியாயமான போராட்டத்தையும் அரசியல் முடிவுகளையும் அங்கீகரித்து ஆதரிக்கின்றனர்.

இத்தகைய அரசியல் முன்முயற்சியும் அரசியல் மேலாண்மையும் புலிகளிடம் இல்லாததற்கு, அதன் சந்தர்ப்பவாத சித்தாந்தமும் பாசிசத் தலைமையுமே காரணமாகும். ஈழ விடுதலைக்கு சிங்கள பாசிச பேரினவாதிகள் மட்டுமின்றி, இந்திய துணை வல்லரசும் அமெரிக்க மேல்நிலை வல்லரசும் கூட எதிரிகளாக நிற்பதை யதார்த்த நிலைமை எடுப்பாக உரைக்கிறது. ஆனால், அமெரிக்க மேல்நிலை வல்லரசை எதிர்த்து நிற்காமல், அமெரிக்க ஆணைப்படி ஈழ விடுதலைக்குக் குழி பறிக்கும் இந்தியத் துணை வல்லரசை எதிர்த்து நிற்காமல், அவற்றின் நிழலில் நின்று கொண்டு, ஈழத்தமிழர்களை அடக்கி ஒடுக்கி வரும் சிங்கள இன வெறி பாசிச அரசை முறியடிக்க முடியாது. ஈழ விடுதலைக்கு உண்மையான ஆதரவு சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டாமல், புலிகளின் ஏக போக பாசிசத் தலைமையால் ஈழ விடுதலையைச் சாதிக்க முடியாது என்பதை வரலாறு மீண்டுமொருமுறை நிரூபிக்கும்.

● மனோகரன்

## நீரின்றி அமையுமா உலகு?

# பவானி நதியை நாசமாக்கும் கிரிமினல் முதலாளிகளைக் கைது செய்!

திருப்பூர் சாயப்பட்டறை முதலாளிகள் அமெரிக்க டாலரைச் சம்பாதிப்பதற்காக நொய்யல் ஆற்றையே சாக்கடையாக மாற்றி, நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயத்தை அழித்ததை நாம் அறிவோம். நொய்யல் ஆற்றைப் போலவே, பவானி நதியும் துணி ஆலை அதிபர்கள், காகித ஆலை முதலாளிகளின் இலாபத்திற்காகச் சூறையாடப்பட்டு வருகிறது.

மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் பவானி ஆறு தமிழகத்தில் இருந்து கேரளாவிற்குள் பாய்ந்து, மீண்டும் தமிழக எல்லைக்குள் நுழையும் ஆணைக்கட்டிப் பகுதியில் மேல் பவானி என அழைக்கப்படுகிறது. பவானி சாகர் அணைக்குக் கீழ் பகுதியில் கீழ்பவானி என அழைக்கப்படுகிறது. பவானி ஆறு தமிழகத்திற்குள் நுழையும் தலைப்பகுதியிலேயே மாசுபடத் தொடங்கி விடுகிறது.

அத்திக்கடவு பகுதியில் இயங்கிவரும் சர்வால் காகித ஆலை, சி.சி.கம்பெனி, கே.ஜி. டெனிம், சாரதா டெர்ரி - பிளிச்சிங் ஆகிய நிறுவனங்களும்;

மேட்டுப்பாளையம், ஆலங்கொம்பு, சிறுமுகை பகுதிகளில் இயங்கி வரும் சவுத் இண்டியன் விஸ்கோஸ், யுனைடெட் பீளிச்சர்ஸ், டேன் இண்டியா, சுதர்சன் பேப்பர் மில் மற்றும் சர்க்கரை ஆலைகளும் ஒருபுறம் பவானி ஆற்று நீரைத் தங்களின் தேவைக்கு உறிஞ்சுக் கொண்டு, இன்னொருபுறம் ஆலைக் கழிவை பவானி ஆற்றிலேயே கொட்டி, மேல்பவானி ஆற்றை மாசுபடுத்தி வருகின்றன.

பவானி சாகர் அணையில் இருந்து சத்தியமங்கலம் நகருக்கு வரும் 15 கி.மீ தொலைவுக்குள் அமைந்துள்ள பத்துக்கும் மேற்பட்ட காகிதத் தொழிற்சாலைகள் கீழ்பவானி ஆற்றை மாசுபடுத்துவதில் முன்னணியில் உள்ளன.

இந்தக் காகித ஆலைகள் ஆலைக் கழிவை மழைநீர் சேகரிப்பு குட்டைகளில் தேங்க விடுவதோடு, பவானி ஆற்றிலும் கழிவைக் கொட்டி, அந்நதியை இரசாயன நச்சுத் தன்மையுள்ளதாக மாற்றி வருகின்றன. காகித ஆலைகள் கழிவைத் திறந்தவெளி சாக்கடையைப் போல, பவானியை நோக்கித் திறந்து விடுவதால், இந்தப் பகுதியின் பூமியே உவராக மாறி வருகிறது. நிலமும், நீரும் மெள்ள மெள்ள நஞ்சாக்கப்படுவதால், இந்தப் பகுதியில் நடந்துவரும் நெல், கரும்பு, மஞ்சள் விவசாயம் அழிந்து போகும் ஆபத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

**காகித ஆலைக் கழிவுகள் பவானி நதியில் கொட்டப்படுவதை எதிர்த்து நடந்த உண்ணாவிரதப் போராட்டம்.**



www.padippakam.com

காகித ஆலைக் கழிவால் கொத்தமங்கலம், ராஜன் நகர், புதுப்பீர்கடவு, இக்கரைநெகமம்புதூர் ஆகிய பஞ்சாயத்துக்களில் உள்ள நிலத்தடி நீரும், கிணற்று நீரும் நஞ்சாக மாறி விட்டதாகவும்; இந்தப் பகுதி விவசாயம் முற்றிலும் அழிந்து விட்டதாகவும்; கால் நடைகள் மலட்டுத்தன்மை அடைவதாகவும்; இந்தப் பகுதி மக்கள் கூறுகிறார்கள்.



அக்ஷரா காகித ஆலை நிர்வாகத்தால் கிரிமினல் வழக்குப் போடப்பட்டுள்ள கொக்கிரக்குண்டி கிராமத்தைச் சேர்ந்த முன்னணி செயல்வீரர்கள்.

கீழ்பவானியைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த பத்தாண்டுகளாகவே, காகித ஆலைக் கழிவுகள் பவானியில் கொட்டப்படுவதை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கீழ்பவானியை ஒட்டி அமைந்துள்ள கிராமங்கள் அனைத்திலும் ஊர் கமிட்டிகள் அமைக்கப்பட்டு, அக்கமிட்டிகள் சார்பாக உண்ணாவிரதப் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் கடந்த ஓராண்டாக மிகத் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்தப் பிரச்சினையில் அதிகார வர்க்கம் எப்படி நடந்து கொள்கிறது என்பதைப் புரிந்து கொள்ள ஒரே யொரு உதாரணம் போதும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் ''மனுநீதி நாள்'' நடத்தப்பட்டபொழுது, அம்முகாமிற்கு வந்த சத்தியமங்கலம் நீதிபதியிடம் கீழ்பவானி பொதுமக்கள், ஆலைக் கழிவுகளால் ஏற்பட்டு வரும் ஆபத்து குறித்த அனைத்து விவரங்களையும் புகைப்பட ஆதாரங்களோடு புகாராகக் கொடுத்தார்கள். இப்புகாரைப் பரிசீலித்த அந்த நீதிபதி, கொடுத்த ஆவணத்திற்கும், காகித ஆலை இயங்கும் இடத்திற்கும் சம்பந்தமேயில்லை என மட்டை அடியாக அடித்துப் புகாரைத் தள்ளுபடி செய்தார்.

அதிகார வர்க்கம் காகித ஆலை முதலாளிகளின் கைக்கூலிகளாக இருப்பதைப் புரிந்து கொண்டுவிட்ட கொக்கிரக்குண்டி கிராம மக்கள், கீழ்பவானி மாசுபடுத்தப்படுவதைத் தடுக்கும் நேரடி நடவடிக்கைகளில் இறங்கி விட்டனர். இக்கிராமத்தையொட்டி இயங்கி வரும் அக்ஷரா காகித ஆலையில் இருந்து லாரிகள் மூலம் கழிவுகள் வெளியேற்றப்படும் பொழுதெல்லாம், அக்கிராம பொதுமக்கள், ஆலையின் முன் திரண்டு அந்த லாரிகள் ஆலையை விட்டு ஒரு அடி கூட நகர முடியாமல் மறியல் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தங்களின் வாழ்வுரிமைக்காகப் போராடும் இம்மக்களை கிரிமினல் குற்றவாளிகள் என அவதூறு செய்து வருகிறது அக்ஷரா நிர்வாகம். கோபிசெட்டிப்பாளையம் சார்பு நீதிமன்றத்தில் நிர்வாகம் சார்பாக ''பிரைவேட் பெட்டிஷன்'' போட்டு, அந்நீதிமன்றத்தின் அனுமதியோடு, இப்போராட்டத்தை முன்னின்று நடத்தும் 18 பேரின் மீது கிரிமினல் வழக்கை நடத்தி வருகிறது.

இக்காகித ஆலைகள் பவானி நதியை மாசுபடுத்துவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. காகிதம் தயாரிப்பதற்குத் தேவைப்படும் மூலப் பொருளான மரங்களை, சத்தி வனப் பகுதியில் இருந்து கடத்திக் கொண்டு வருவது; மின்சாரம் திருடுவது எனப் பல வழிகளில் பொதுச் சொத்தைக் கொள்ளையடித்து வருகின்றன.

அனைத்து ஓட்டுக்கட்சிகளும் இந்தக் கொள்ளைக் கும்பலுக்குத் துணை நிற்கின்றன, சட்டசபை தேர்தலுக்காக இம்முதலாளிகளிடம் நன்கொடை கறக்க வேண்டியிருப்பதால், எந்த வொரு ஓட்டுக் கட்சியும் மக்களுக்கு ஆதரவாக ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை.

தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் 1.5 இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன நீரை வழங்கும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால்கள் பவானி நதியைத் தான் நம்பியுள்ளன.

பவானி நதிநீரை ஆதாரமாகக் கொண்டிருக்கும் அத்திக்கடவு குடிநீர் திட்டம் மூலம்தான், கோவை நகரின் ஒரு பகுதிக்கும்; பல்லடம், அவிநாசி, திருப்பூர் ஆகிய நகரங்களுக்கும், ஈரோடு மாவட்டத்திற்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, பவானி நதிநீரை மாசுபடுத்துவது, பல இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையை நாசப்படுத்துவதாகும்.

நீரின்றி அமையாது உலகு என்பது எல்லோருக்கும் தெரிந்த அறிவியல் உண்மை. ஆனால், தாராளமயத்தின் பின் தமிழகத்தின் நீர் ஆதாரங்களைத் தனியார் முதலாளிகள் சூறையாடுவது கேள்வி கேட்பாரின்றி நடந்து வருகிறது. தமிழகத்தின் ஒரே ஜீவ நதியான தாமிரவருணியை, கொக்கோ கோலா சோடா கம்பெனிக்கு பட்டா போட்டுக் கொடுத்துவிட்டது, தமிழக அரசு. அதை எதிர்த்து திருநெல்வேலி - தூத்துக்குடி மாவட்ட மக்கள் போராடி வருகிறார்கள். தமிழகத்தின் வடபகுதியில் பாயும் பாலாற்றை, மணற் கொள்ளையர்கள் சூறையாடுவதை எதிர்த்துப் பல கிராமங்களில் தன்னெழுச்சியாகப் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

பவானி, தாமிரவருணி, பாலாறு உள்ளிட்டு, நீர் ஆதாரங்களின் மீது சமூக உரிமையை நிலைநாட்டுவதற்காகத் தமிழக மக்கள் நடத்தி வரும் இப்போராட்டங்கள் இணைக்கப்பட்டு, அதனை மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டமாக வளர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**● பு.ஜ. செய்தியாளர், கோவை.**


படிப்பகம்

# மனித உரிமைகளை மறுக்கும் உலகமயமாக்கம்

அபாயகரமான ஆஸ்பெஸ்டாஸ் கழிவுகள் நிறைந்த பிரெஞ்சு இராணுவக் கப்பல், இந்தியாவில் உடைக்கப்படுவதற்காக அனுப்பப்பட்டதை எதிர்த்துப் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் சமீபத்தில் போராடின. இந்தப் பிரச்சினையில் தலையிட்ட உச்சநீதி மன்றம், ''இது குறித்து யாரும் எந்தக் கருத்தும் கூறக் கூடாது'' என உத்தரவு போட்டது. நமது நாட்டில் கருத்துரிமை எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதற்கு இச்சம்பவம் ஒரு முத்தாய்ப்பான உதாரணம்.

பொது மக்களின் பிரச்சினைகளுக்காகப் பொதுக் கூட்டங்கள் போடுவது; ஊர்வலங்கள்; கடையடைப்புப் போராட்டங்கள் நடத்துவது; தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்கள் செய்வது - இப்படி இதுநாள்வரை அரசியல் சாசனத்தில் இருந்து வந்த சட்டபூர்வமான ஜனநாயக உரிமைகளை, ஒவ்வொன்றாக நீதிமன்றம் சட்டவிரோதம் என அறிவித்து வருகிறது. இத்தீர்ப்புகள் ஒருபுறமிருக்க, இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பையே, ''பொடா''விற்கு இணையாகத் திருத்தி எழுதும் முயற்சியில் மைய அரசு ஏற்கெனவே இறங்கிவிட்டது.

தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனியாக்கத்திற்கு ஏற்றவாறு, சட்டபூர்வ பாசிச ஆட்சி அரங்கேறி வருவதைத்தான், இவை அனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.

இப்பாசிச அபாயத்தைப் பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில், மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டக் கிளை, கடந்த பிப்.18 அன்று, ''உலகமயமாக்கச் சூழலில் மனித உரிமைகளின் நிலை'' எனும் கருத்தரங்கை மதுரை - விக்டோரியா எட்வர்டு மன்றத் திறந்தவெளி அரங்கில் நடத்தியது. மனித உரிமைப் போராளியும், மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டக் கிளையின் தலைவருமான ஆர்.நல்லகாமன், இக்கருத்தரங்கை தலைமை தாங்கி நடத்தினார்.

இக்கருத்தரங்கில், ''உள்நாட்டுச் சட்டங்களைச் செல்லாக்காசாக்கும் பன்னாட்டு மூலதனம்'' எனும் தலைப்பில் உரையாற்றிய பெங்களூரைச் சேர்ந்த வழக்குரைஞர் எஸ்.பாலன், ''பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது இலாப வேட்டைக்கு ஏற்றாற்போல, ஒவ்வொரு துறையிலும் இந்தியச் சட்டங்களை எப்படி மாற்றி அமைக்கின்றன'' என்பதனை பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கினார்.

மதுரை உயர்நீதி மன்ற முன்னணி வழக்குரைஞர் தி.லஜபதிராய், ''சாதியப் படிநிலைகளும் சட்டங்களும்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். ''பெருவாரியான இந்திய சட்டங்கள் சாதிய கட்டுமானத்தை வலுப்படுத்துகின்ற வகையிலேயேதான் எழுதப்பட்டுள்ளன'' என விளக்கிப் பேசிய அவர், உச்சநீதி மன்றத்தில் புரையோடிப் போயிருக்கும் மேல் சாதி வெறியையும் அம்பலப்படுத்தினார்.

''ஊழல் நீதிமன்றங்களுக்கும் உண்மையான நீதிக்கும் இடையே உள்ள தூரம்'' எனும் தலைப்பில் உரையாற்றிய திராவிடர் கழக மாநிலச் சட்டத்துறை அமைப்பாளர் வழக்குரைஞர் சி.மகேந்திரன், ''காசு உள்ளவனுக்கே நீதி என்பது தான் நீதிமன்றங்களின் இன்றைய நிலை. நீதிமன்றங்களில் இலஞ்ச - ஊழல் தலைவிரித்தாடும் பொழுது, அங்கே நீதிக்கு எங்கே இடம் இருக்கிறது'' என வினவினார்.

நெல்லை வழக்குரைஞர் சங்கத் தலைவர் இரா.சி.தங்கசாமி, ''மனித உரிமை மீறல்களும் அதற்கான தீர்வுகளும்'' எனும் தலைப்பில் பேசிய பொழுது, ''மனித உரிமைகளை மீட்பதற்கான தீர்வு நீதிமன்றங்களிலோ, அதிகார மட்டங்களிலோ இல்லை. மக்கள் போராட்டங்களே அதற்கான தீர்வு'' எனக் குறிப்பிட்டார்.

''மனித உரிமைகளை மறுக்கும் அதிகார வர்க்கத்தை''ப் பற்றி உரையாற்றிய தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சட்ட ஆலோசகரும், பிரபல வழக்குரைஞருமான பவானி பா.மோகன், ''ஒரு தவறும் செய்யாத சாமானிய மக்கள் பலர் சிறை, சித்திரவதை போன்ற கொடுமைகளை அனுபவித்து வருவதற்கு அதிகாரிகளே காரணம்; உரிமைகளுக்காகப் போராடுகிறவர்களைச் சிறையில் தள்ளி வேடிக்கை பார்க்கிறது அதிகார வர்க்கம். இந்த நிலை மாற வேண்டுமானால் மனித உரிமை பாதுகாப்பு மையம் போன்ற அமைப்புகள் வளர வேண்டும்'' என எடுத்துக் கூறினார்.

மக்கள் அமைப்பு ரீதியாகத் திரண்டு போராடத் தொடங்கினால், பாசிசம் தவிடுபொடியாகி விடும் என்பதை உணர்த்துவதாக இக்கருத்தரங்கம் அமைந்தது.

*- மனித உரிமை பாதுகாப்பு மையம், மதுரை மாவட்டக் கிளை.*

கருத்தரங்கில் உரையாற்றும் வழக்குரைஞர் இரா.சி.தங்கசாமி. (அமர்ந்திருப்போர்-இடமிருந்து) வழக்குரைஞர் எஸ்.பாலன், ஆர்.நல்லகாமன், தலைவர், மனித உரிமை பாதுகாப்பு மையம், மதுரை மாவட்டம்; வழக்குரைஞர்கள் சி.மகேந்திரன், தி.லஜபதிராய் மற்றும் பா.மோகன்.




''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 2. | வெளியிடும் காலம் | : மாதம் ஒருமுறை |
| 3. | அச்சிடுபவர் பெயர் | : இரா. சன்முகராசு |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 4. | உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் | : இரா. சன்முகராசு, |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 5. | ஆசிரியர் பெயர் | : இரா. சன்முகராசு |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |

இரா. சன்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2006 (ஒப்பம்) இரா. சன்முகராசு, வெளியிடுபவர்.

www.padippakam.com

# கொலைகார 'கோக்'குடன் சர்வகட்சி கூட்டணி

மக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி நெல்லை-கங்கைகொண்டான் கொக்கோ கோலா ஆலைக்கு, இயங்குவதற்கான உரிமத்தை (Running Licence) மானூர் ஊராட்சி ஒன்றியம் கடந்த பிப்ரவரி 10-ஆம் தேதியன்று வழங்கியுள்ளது. இந்தத் துரோகம் எப்படி நிறைவேறியது என்பதை, மறுநாள் (11.2.06) வெளியான நாளிதழ்களின் செய்திகளிலிருந்தே தொகுத்துத் தருகிறோம்.

பஞ்சாயத்து யூனியன் கூட்டப் பொருட்குறிப்பில் குளிர்பானக் கம்பெனிக்கு ரன்னிங் லைசென்ஸ் வழங்கும் பொருள் சேர்க்கப்பட வேண்டும் என்று 21 யூனியன் கவுன்சிலர்களில் 14 பேர் யூனியன் தலைவர் விஜயாவுக்கு கடந்த 23.1.2006 அன்று மனு அனுப்பினர். யூனியன் தலைவர் விஜயா உடனடியாக கவுன்சிலர்களுக்கு பதில் கடிதம் அனுப்பினார். அதில், கட்டிட அனுமதி, நகரமைப்பு அனுமதி மற்றும் பிற சான்றுகள் உரிய முறைப்படி உரிய இடத்தில் பெறவில்லை; பல விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது; எனவே, கம்பெனிக்கு லைசன்ஸ் வழங்க வேண்டுகோள் கூட்டம் நடத்த இயலாது என்று தெரிவித்தார். இந்நிலையில் மானூர் யூனியன் துணைத்தலைவர் பாலகுமார் 9.2.2006 அன்று மானூர் யூனியன் வேண்டுகோள் கூட்டம் நடைபெறும் என்று யூனியன் கவுன்சிலர்களுக்கு அழைப்பு அனுப்பினார். *(தினத்தந்தி)*.

ஆலைக்கு இயக்க உரிமம் வழங்குவதற்கான விதிமுறைகள் நிறைவேற்றப் படவில்லை என்றும், அதற்கான ஆவணங்களும் தனது பார்வைக்கு வைக்கப் படவில்லை என்றும் கூறி கூட்டத்தை நடத்த அனுமதிக்கக் கூடாது என ஊராட்சிக் குழுத் தலைவி விஜயா, உறுப்பினர் சி.எஸ். மணி ஆகியோர் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந் நிலையில் ஊராட்சி ஒன்றியக் குழுவின் சிறப்புக் கூட்டம் துணைத் தலைவர் பாலகுமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் சுவாமிதாஸ் முன்னிலை வகித்தார். சிறப்பு பார்வையாளராக உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) பரமசிவம் கலந்து கொண்டார். மொத்த உறுப்பினர்கள் 21 பேரில் 17 பேர் கலந்து கொண்டனர். தலைவி உள்ளிட்ட 4 பேர் கலந்து கொள்ளவில்லை. *(தினமணி)*.

நேற்று மானூர் சுற்றுப் பகுதி முழுவதும் நூற்றுக்கணக்கான போலீசார் குவிக்கப்பட்டனர். மானூர் பஸ் ஸ்டாப், யூனியன் அலுவலகத்தில் நேற்று மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது. யூனியன் அலுவலகம் முன்பு போராட்டம் நடத்த சில அமைப்புகள் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் பரவியதையடுத்து மதவக்குறிச்சி, எட்டான்குளம், கங்கைகொண்டான், ரஸ்தா உட்பட பல்வேறு கிராமங்களில் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். பாதுகாப்புப் பணிகளை மாவட்ட எஸ்.பி.ஆனந்த குமார் சோமானி பார்வையிட்டார். *(தினமலர்)*.

தி.மு.க.வைச் சார்ந்த துணை சேர்மன் பாலகுமார் நடத்திய இந்தக் கூட்டத்தின் ஒரே நிகழ்ச்சி நிரல் கோக் (எஸ்.ஐ.பி.சி.எல்) கம்பெனிக்கு அனுமதி வழங்குவதுதான். கூட்டம் தொடங்கியவுடனே இந்த ஆலையை எதிர்த்து வருபவரான கவுன்சிலர் சி.எஸ்.மணி பேசினார். அனுமதி கோரி விண்ணப்பித்துள்ள கோக் கம்பெனி கொடுத்துள்ள ஆவணங்களின் பட்டியலையும், நகலையும் தருமாறு அதிகாரிகளிடம் கோரினார். அவருடைய கேள்விகளுக்கு அதிகாரிகள் பதிலளிக்கவில்லை. *(தி இந்து)*.

''கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த துணைத்தலைவராகிய நீங்கள் கூறுங்கள்'' என்று மணி கேட்டார். உடனே துணைத்தலைவர் ''தீர்மானம் நிறைவேறிவிட்டது'' என்று அறிவித்தார். இதையடுத்து ஆவேசமடைந்த மணி கூட்ட அரங்கில் இருந்து வெளிநடப்பு செய்தார். கூட்டம் துவங்கிய 15 நிமிடத்தில் முடிந்தது. *(தினமலர்)*.

கொக்கோ கோலாவிற்கு ரன்னிங் லைசென்ஸ் வழங்கும் தீர்மானத்தில்

**கங்கைகொண்டான் கொக்கோ கோலா குளிர்பானத் தயாரிப்பு ஆலைக்கு இயக்க உரிமம் வழங்குவதற்காக நடைபெற்ற மானூர் ஊராட்சி ஒன்றிய சிறப்புக் கூட்டத்தில் கோக்கிற்கு ஆதரவாகப் பேசும் தி.மு.க.வைச் சேர்ந்த துணைத்தலைவர் பாலகுமார். கோக்கிற்கு அனுமதி கொடுக்கும் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வாதாடும் உறுப்பினர் சி.எஸ்.மணி (வலது).**




படிப்பகம்

www.padippakam.com

கையெழுத்திட்ட கவுன்சிலர்கள் அனைவருக்கும் 'பெப்சி' குளிர் பானம் வழங்கப் பட்டது. அனைத்து கவுன்சிலர்களும் ரசித்து உறிஞ்சி மகிழ்ந்தனர். கவுன்சிலர்கள் அனைவரும் தனி வேனில் கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டு, அதே வேனில் திரும்ப அழைத்துச் செல்லப் பட்டனர். *(தினகரன்)*.




குளிர்பானக் கம்பெனிக்கு ஆதரவாக தங்கள் கட்சியின் கம்பெனி எதிர்ப்புக் கொள்கையை 'கண்டுகொள்ளாமல்' புதிய தமிழகம் கட்சி கவுன்சிலர்கள் ஜெயபால், லட்சுமி, சவுரியம்மாள், கணபதி உள்ளிட்ட கவுன்சிலர்கள் தீர்மானம் நிறைவேற்றினர். அ.தி.மு.க., தி.மு.க., காங்கிரசு, ம.தி.மு.க. கவுன்சிலர்கள் 'ஒற்றுமை' யுடன் செயல்பட்டு கம்பெனிக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றினர். *(தினமலர்)*.

●●●

இந்தத் துரோகம் எதிர்பாராதது அல்ல; கொக்கோ கோலா ஆலைக்கு எதிராகப் போராடி வரும் மக்கள் இந்தச் சம்பவத்தினால் அதிர்ச்சியோ, ஏமாற்றமோ அடைவதற்கும் எதுவுமில்லை. மாறாக, இச்செய்திகளைக் கூர்ந்து நோக்கினால் மக்களின் வெறுப்பையும் கோபத்தையும் கண்டு எதிரிகள் அடைந்திருக்கும் பீதியைப் புரிந்து கொள்ள முடியும். மக்களின் போராட்டம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையைப் பெறவும் முடியும்.

கூட்டம் நடப்பதற்கு 4 நாட்கள் முன்னதாகவே கோக்கிற்கு ஆதரவாக வாக்களித்த 16 கவுன்சிலர்களும் தத்தம் ஊர்களிலிருந்து காணாமல் போய் விட்டார்கள். பாதுகாப்பான விபச்சாரத்திற்கு பொறுக்கிகள் தேர்ந்தெடுக்கும் புண்ணியஸ்தலமான திருப்பதிக்கு கவுன்சிலர்களை ஓட்டிச் சென்றது கோக் நிர்வாகம். செய்தியறிந்த எமது தோழர்கள் கங்கைகொண்டான் சுற்றுவட்டாரம் முழுவதும் சுவரொட்டிகள் மூலம் இதை அம்பலப்படுத்தினர். கோக்கின் சதியை அம்பலப்படுத்தி எல்லா கிராமங்களிலும் பிரசுரம் விநியோகித்தனர். 10-ஆம் தேதியன்று மானூர் பஞ்சாயத்து யூனியனுக்குத் திரண்டு வருமாறு அறைகூவல் விடுத்தனர். 'ஜாலி டூர் விவகாரம்' பத்திரிகைகளிலும் சந்தி சிரித்தது.

கொக்கோ கோலாவிற்கு கங்காணி வேலை பார்ப்பதற்காகவே ஒதுக்கப் பட்டிருக்கும் ''கியூ'' பிரிவு போலீசு பிராணிகள் உடனே விழித்துக் கொண்டன. கோக்கின் 'தனியார் செக்யூரிட்டி ஏஜென்சி'யாகச் செயல்படும் மாவட்ட போலீசு நிர்வாகமோ, ஒவ்வொரு கிராமத்துக்கும் தனித்தனியே போலீசு படையை அனுப்பி மக்களை அச்சுறுத்தியது. இந்தக் கெடுபிடிகளையெல்லாம் மீறி, 10-ஆம் தேதியன்று தங்கள் கைக்காசைப் போட்டு பேருந்தைப் பிடித்து மானூர் வந்து சேர்ந்த மக்கள், பஞ்சாயத்து அலுவலகத்தை நெருங்கக் கூட முடியவில்லை.

மக்களிடமிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் சோமானியின் தலைமையில் ஒரு போலீசு படை பஞ்சாயத்து யூனியன் கட்டிடத்தை முற்றுகையிட்டிருந்தது. உள்ளே 'ஜனநாயகம்' வேலை செய்த லட்சணத்தை நேரில் கண்ட பத்திரிகையாளர்கள் எழுதியுள்ளதைத்தான் நீங்கள் ஏற்கெனவே படித்துள்ளீர்கள்.

மறுகாலனியாதிக்கம் என்பது தன் இயல்பிலேயே ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதற்கு இச்சம்பவம் இன்னுமொரு சான்று. எந்த ஒரு ஆலையும் இயக்க உரிமம் (Running licence) பெற வேண்டுமானால் அதற்குரிய தரவுகளையும் ஆவணங்களையும் பார்வைக்கு வைக்க வேண்டும். கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப் பட்டுள்ளதா, மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதா, தண்ணீர் பயன்பாடு குறித்து குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப்பணித்துறையின் மதிப்பீடு என்ன - என்பன போன்ற எந்த விவரங்களையும் ஊராட்சி மன்ற உறுப்பினருக்குக் கொடுக்காமல் 'கையெழுத்து போடு' என்று மிரட்டுகிறது கோக். கேள்வி எழுப்பினாலோ வாய் திறக்க மறுக்கிறார்கள் அதிகாரிகள்.

வாய் நிறைய எலும்பைக் கவ்வியிருக்கும்போது எப்படித் திறக்க முடியும்? அமைச்சர்களும், மெத்தப் படித்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும் இந்த பன்னாட்டு மூத்திரக் கம்பெனியின் பின்னால் ரொட்டித்துண்டுக்கு அலையும் தெருநாய்களைப் போல அலையும்போது, ஒரு சாதாரண கவுன்சிலரின் கேள்விக்கு எப்படி பதில் கிடைக்கும்? அதனால்தான் பயங்கரவாதியைப் பின் தொடர்வதைப் போல கவுன்சிலர் மணியைப் பின்தொடர்கிறது போலீசு.

கவுன்சிலர் மணி ஒரு மில் தொழிலாளி. ஊராட்சி மன்றத் தலைவர் விஜயாவோ தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண். கோக்கை எதிர்க்கும் மற்ற 3 கவுன்சிலர்களும் பெரிய படிப்போ அந்தஸ்தோ இல்லாத எளிய மனிதர்கள். ஆனால், தாம் பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் விசுவாசமானவர்கள். தம் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து வரக்கூடும் என்று தெரிந்தும் கோக்கிற்கு விலை போக மறுக்கும் நேர்மையாளர்கள்! வாங்கிய காசுக்காகவும், வாங்க விரும்பும் பதவி உயர்வுக்காகவும் சட்டத்தை வளைத்து எட்டப்பன் வேலை பார்க்கும் கைக்கூலிகளுக்குப் பெயரோ அதிகாரிகள், ஆட்சியாளர்கள்! இவர்கள் நடத்தும் நிர்வாகத்துக்குப் பெயர் ஜனநாயகம்!

16 கவுன்சிலர்களும் கோக்கினால் குளிப்பாட்டப்பட்டவர்கள் என்பது ஊரறிந்த ரகசியம். நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்க லஞ்சம் வாங்கி காமெராவின் முன்னால் பிடிபட்ட எம்.பி.க்கள் மீது நடவடிக்கை! கேள்வி கேட்காமலிருப்பதற்காக லஞ்சம் வாங்கிய கவுன்சிலர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது? நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் திருப்பதி உண்டியலில் இவர்கள் காசு போட்டார்களா, இவர்க

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

## தயா நாயக்:

# போலீசு பயங்கரவாதியின் மறுபக்கம்

மும்பையில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள், ஒரு பண்ணை வீடு உள்ளிட்ட ரூ. 45 கோடி மதிப்புடைய சொத்துக்கள்; விஷால் டிராவல்ஸ் என்ற பெயரில் சொகுசுப் பேருந்துகள்; மனைவி பெயரில் சுவிட்சர்லாந்தில் அடுக்குமாடி குடியிருப்பு; துபாயில் நடன விடுதி கொண்ட நட்சத்திர ஓட்டலின் பங்குதாரர்; மனைவி பெயரில் கோடிகளைப் பரிமாற்றம் செய்யும் சீட்டுக் கம்பெனி; 4 வங்கிக் கணக்குகள் - அதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 13 கோடிக்கு மேல் ரொக்கப் பரிமாற்றம்; சினிமா தயாரிப்பாளர்களுக்குக் கோடிக் கணக்கில் கடன் கொடுக்கும் பைனான்சியர்....

- இப்படி கணக்கற்ற சொத்துக்கு அதிபதியாக இருப்பவர் பெரு நிலப்பிரபுவோ, தரகுப் பெருமுதலாளியோ அல்ல; மாதம் ரூ. 9000 சம்பளம் வாங்கும் ஒரு சாதாரண போலீசு உதவி ஆய்வாளர். அதிசயம்; ஆனால் உண்மை! இந்தத் துணை ஆய்வாளரின் சொத்து மதிப்பு ரூ. 100 கோடிக்கும் மேல் இருக்கும் என்கிறார்கள், ஊழல் ஒழிப்புத் துறை அதிகாரிகள்.

இவரைச் சாதாரண போலீசு உதவி ஆய்வாளர் என்று குறுக்கிச் சுருக்கி விட முடியாது. ஏனெனில், இவர் 80-க்கும் மேற்பட்டோரைச் சுட்டுக் கொன்று நாடெங்கும் புகழ் பெற்ற ''மோதல் கொலை'' சூரப்புலி. அதாவது, ''என்கௌண்டர் ஸ்பெஷலிஸ்ட்!'' அவரது வீரதீர பராக்கிரமங்களை வைத்து சில இந்தி திரைப் படங்களும் வெளிவந்துள்ளன. கடந்த பத்தாண்டுகளாக செய்தி ஊடகங்களால் வீரதீர நாயகனாகச் சித்தரிக்கப்பட்ட இவர், இப்போது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையில் வைக்கப் பட்டுள்ளார். இந்த போலீசு வீரநாயகன்தான் தயானந்த் நாயக்!


மும்பையில் தரகுப் பெருமுதலாளிகள், வீட்டு மனைத் தொழிலதிபர்களின் போட்டா போட்டியில், எதிர்த்தரப்பை முடக்க கிரிமினல் கும்பல்களைப் பயன்படுத்துவது அதிகரித்து. பின்னர் இந்தக் கிரிமினல் கும்பல்கள் மிகப் பெரிய மாஃபியா கும்பல்களாக வளர்ந்து விட்டன. மும்பையை ஆதிக்கம் செய்வதில் பால்தாக்கரே, தாவூத் இப்ராஹிம், அருண் காவ்லி, சோட்டா ஷகீல் முதலான மாஃபியா கும்பல்களுக்கிடையே போட்டா போட்டி தாக்குதல்களும் கொலைகளும் தொடர்ந்தன. இரகசிய உலக மாஃபியா கும்பல்களை ஒழித்துக் கட்டுவது என்ற பெயரில் சிறப்பு போலீசுப் பிரிவு நிறுவப்பட்டு போலீசார்ருக்கு எல்லையற்ற அதிகாரமும் வழங்கப்பட்டது. இந்தச் சமயத்தில், தயாநாயக் மும்பை போலீசுத் துறையில் சேர்ந்து தனது சூரத்தனத்தைக் காட்டத் தொடங்கினார்.

போலீசு என்பதே சட்டபூர்வ கிரிமினல் கும்பலாக இருக்கும்போது, அது எப்படி ரகசிய உலக மாஃபியா - கிரிமினல் கும்பல்களை ஒழிக்க முடியும்? போலீசுக்கும் கிரிமினல்களுக்கும் இடையிலான மாமன்-மச்சான் உறவை உறுதிப்படுத்தி, தனது வேட்டையில் கொழுத்த ஆதாயமடைந்தார், சூரப்புலி தயாநாயக். ஒரு தாதா கும்பலுக்கு எதிராக இன்னொரு தாதா கும்பலைச் சேர்ந்தவர்களைத் தீர்த்துக் கட்டி விட்டு அதற்கு கப்பம் வசூலிப்பது; அல்லது ஒரு தாதா கும்பலை சுட்டுக் கொல்லாமல் விட்டு வைப்பதற்காக கப்பம் வசூலிப்பது; இரகசிய உலகப் பேர்வழி என்று முத்திரை குத்தி, அப்பாவிகளைச் சுட்டுக் கொன்றுவிட்டு அரசாங்கத்திடம் பரிசும் பாராட்டும் வெகுமதிகளையும் பெறுவது என்று தயாநாயக் இரண்டு மேடைகளில் இரு வேறு பாத்திரங்களில் நாடகமாடினார். சோட்டா ஷகீல் தலைமையிலான மாஃபியா கும்பலுடன் திரைமறைவுக் கூட்டணி கட்டிக் கொண்டு, இதர மாஃபியா கும்பலைச் சேர்ந்தவர்களைச் சுட்டுக் கொன்றும் மிரட்டியும் கோடிகோடியாய் குவித்தார். மறுபுறம், மாஃபியா கும்பல்களின் கொட்டம் தற்காலிகமாக ஒடுக்கப்பட்டதைக் கண்டு அரசாங்கமும் செய்தி ஊடகங்களும் அவரை வீராதிவீரனாகச் சித்தரித்து புகழ் பாடின.

கோடிகோடியாய் பணமும், புகழும், அதிகாரமும் பெருகப் பெருக போலீசுத்துறையை விட உயர்ந்த, அதையே இயக்கும் தலைமைப் பீடமாக தயாநாயக் தலைமையிலான குற்றவியல் பிரிவு போலீசு கும்பல் வளரத் தொடங்கியது. போலீசு கமிஷனர், இயக்குனர்களின் அதிகார பூர்வ முடிவுகளைவிட, தமது சொந்த ஆதாயத்துக்கான முடிவுகளையே செயல்படுத்தியது. தெல்கியின் போலி முத்திரைத்தாள் ஊழல் விவகாரம் முதல் பஞ்சாப் பெட்ரோல் விற்பனை நிலைய ஊழல் வரை அனைத்திலுமே மும்பை குற்றவியல் பிரிவு போலீசும் உயரதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று பத்திரிகைகளே அம்பலப்படுத்துகின்றன. ஒட்டுமொத்த போலீசுத்துறையே சமூக விரோதக் குற்றங்களில் ஈடுபட்டு வந்த நிலையில் தயாநாயக்கின் கொட்டமும் கொள்ளையும் கேள்வி முறையின்றித் தொடர்ந்தது.

மாதுரி சாக்சேனா என்ற விளையாட்டு

சட்ட விரோதமான முறையில் கோடிகோடியாகச் சொத்து சேர்த்துள்ள காக்கிச் சட்டை கிரிமினல் தயாநாயக் மற்றும் அவரது மனைவி கோமல்.





படிப்பகம்

www.padippakam.com

வீராங்கனைக்கு வழங்கப்பட்ட அர்ஜுனா விருது தொகையை, தனது ஓஜோஸ் வீட்டுமனை நிறுவனத்தில் முதலீடு செய்ய வைத்து, அதற்கீடாக பஞ்சாபில் பெட்ரோல் விற்பனை மையம் நடத்த ஏற்பாடு செய்த ஊழல் விவகாரம், தனது பினாமிகளின் ''தேவ் பெயிண்ட்ஸ்'' நிறுவனத்தின் மூலம் கருப்புப் பணத்தை முதலீடு செய்த விவகாரம், இரகசிய உலகப் பேர்வழி சோட்டா ஷகீலின் கூட்டாளியான பாஹிமிடமிருந்து ரூ. 5 கோடி கையூட்டாகப் பெற்ற விவகாரம், இரும்புக் கழிவு வியாபாரியை சுட்டுக் கொன்று விடப் போவதாக மிரட்டி லட்சக்கணக்கில் கப்பம் வசூலித்த விவகாரம் - என சூரப்புலி தயாநாயக்கின் மகாத்மியங்கள் அடுத்தடுத்து கசியத் தொடங்கின. மும்பையின் புலனாய்வுச் செய்தியாளரான கேத்தன் திரோத்கர், மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் ரகசிய உலகப் பேர்வழிகளுடன் சேர்ந்து தயாநாயக் செய்த ஏராளமான குற்றங்களைப் பட்டியலிட்டு வாக்குமூலம் அளித்தார். ஆனாலும் மும்பை போலீசு உயரதிகாரிகள் அவற்றைப் பரிசீலிக்கக் கூட முன்வராமல் அனைத்தையும் மூடி மறைத்தனர்.

இப்போது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த விவகாரம் மெதுவாக வெளிவந்து ஊழல் தடுப்பு அதிகாரிகள் விசாரணை நடத்துகிறார்களே தவிர, ரகசிய உலகப் பேர்வழிகளுடன் சேர்ந்து சூரப்புலி தயாநாயக் நடத்திய சதிகள், கொலைகள், பேரங்கள், ஆதாயங்கள் பற்றி எந்த விசாரணையுமில்லை. தயாநாயக்கை கைது செய்து விசாரிக்கக் கூடாது என மும்பை போலீசே முட்டுக்கட்டை போட்டுள்ளதோடு, தயாநாயக்கின் வழக்குரைஞர் மூலம் உச்சநீதி மன்றத்தில் தடையாணையும் பெற்றுக் கொக்கரிக்கிறது.

சட்டத்திற்கு அப்பாற்பட்ட தனி அதிகாரமாகக் கொட்டமடித்த தயாநாயக்கை வீரதீர நாயகனாகச் சித்தரித்ததைப் போலவே, இங்கேயும் தேவாரம், விஜயகுமார், வெள்ளைத்துரை என அரசு பயங்கரவாதிகள் சூரப்புலிகளாக செய்தி ஊடகங்களாலும் ஆட்சியாளர்களாலும் புகழப்படுகிறார்கள். பரிசும், பதவியும், பதக்கங்களும், சிறப்புச் சலுகைகளும் இப்பயங்கரவாதப் போலீசு கும்பலுக்கு வாரியிறைக்கப்படுகின்றன. அவர்களது ''என்கௌண்டர் கொலைகள்'' எவ்வித விசாரணையுமின்றி நியாயப்படுத்தப்படுகின்றன.

நாடு எத்தகையதொரு அரசு பயங்கரவாத கிரிமினல் கும்பலிடம் சிக்கிக் கொண்டுள்ளது என்பதற்கு தயாநாயக் விவகாரம் இன்னுமொரு சாட்சியம். வழக்கு, விசாரணை, பதவிநீக்கம் முதலானவற்றால் இந்தப் பயங்கரவாதக் கும்பலைத் தண்டித்துவிட முடியாது. அரசு பயங்கரவாத போலீசு அமைப்பையே கலைப்பதற்கான மக்கள் போராட்டங்களாலும், அப்போராட்டக் களத்தில் கட்டியமைக்கப்படும் மக்கள் நீதிமன்றங்களாலும்தான் இப்பாசிச பயங்கரவாதக் கும்பலைத் தண்டிக்க முடியும்.

● தனபால்

---

19-ஆம் பக்கத் தொடர்ச்சி

ளுடைய உண்டியலில் கோக் காசு போட்டதா என்பதையும், அங்கே லட்டு தின்று துளசி தீர்த்தம் குடித்தார்களா அல்லது சரக்கடித்து மட்டன் பிரியாணி தின்றார்களா என்று நாம் படமெடுத்து நிரூபிக்க வேண்டும். அத்தகைய அபாயத்தைத் தடுப்பதற்காக நெல்லை மாவட்ட போலீசின் பாதுகாப்பைக் கூட கோக் ஏற்பாடு செய்திருக்கக் கூடும்.

கங்கைகொண்டானில் 16 கவுன்சிலர்கள் அமைத்துள்ள சர்வ கட்சிக் கூட்டணியிலிருந்து தமிழகமே பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வற்றாத தாமிரவருணியை, வறண்டு போன தென் மாவட்டங்களின் குடிநீர் ஆதாரத்தை, நெல்லை - தூத்துக்குடி மாவட்டங்களின் விவசாயத்தை - என அனைத்தையும் அழிக்கவிருக்கும் ஒரு அமெரிக்க கம்பெனிக்கு கைக்கூலிகளாகச் செயல்பட்டுள்ளவர்கள் இந்த கவுன்சிலர்கள் மட்டுமல்ல. ஜெயலலிதா, கருணாநிதி, வை.கோ., ராமதாசு போன்ற அனைவரும்தான். தொகுதிப் பங்கீடு, பேச்சு வார்த்தை போன்ற எதுவும் இல்லாமல் காதும் காதும் வைத்தாற்போல இயங்கும் இந்த சர்வகட்சிக் கூட்டணியை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளும் விதத்தில் கோக் ஆலைக்கெதிராகக் குரல் கொடுத்து வருகிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. மேற்கு வங்கத்தில் கோக்-பெப்சி ஆலைகள் இயங்கி வருகின்றன; 'உலகப் புகழ் பெற்ற' பிளாச்சிமடா ஆலைக்கு உரிமம் வழங்கியதும் 'மார்க்சிஸ்டு' அரசுதான். இந்த உண்மைகள் ஒருபுறம் இருக்கட்டும்; தோழமைக் கட்சிகளான தி.மு.க., ம.தி.மு.க., காங்கிரசு போன்ற கட்சிகளும், சுற்றுச் சூழலுக்காக பசுமைத்தாயகம் என்றொரு தனி அமைப்பை வைத்து நடத்தும் பா.ம.க.வும் கோக் ஆலைக்கு ஆதரவளித்து வருவதை 'மார்க்சிஸ்டு' கட்சி அம்பலப்படுத்துமா? இவர்களுடைய கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் கோக் ஆலைக்கு உரிமம் ரத்து செய்யப்படும் என்ற வாக்குறுதி இடம் பெறுமா? அல்லது 3 மாவட்ட மக்களின் வாழ்க்கை சோரம் போவதை அனுமதித்து விட்டு 'மார்க்சிஸ்டு' கட்சி தி.மு.க.வுடன் தொகுதி பேரம் பேசுமா?

**இராக்கில் நடப்பது மட்டுமல்ல, இங்கே - கங்கை கொண்டானில் நடப்பதும் ஆக்கிரமிப்புதான் என்பதைப் பாமர மக்களும் புரிந்து கொள்வார்கள். அப்போது கோக் எதிர்ப்புப் போராட்டம் விடுதலைப் போராட்டமாக வடிவெடுக்கும்.**

வரவிருக்கும் தேர்தலில் எந்தக் கூட்டணி வெற்றி பெற்றாலும் கொக்கோ கோலாவிற்குக் கவலை இல்லை. கங்கைகொண்டான் மக்களுக்கும் விடிவு இல்லை. ஆனால், ஓட்டுக் கட்சிகளின் இந்த நாடகம் நெடுநாள் நீடிக்க முடியாது. மக்கள் முகத்தில் விழிக்க அஞ்சி, தலைமறைவான கவுன்சிலர்களைப் போல எல்லா எம்.எல்.ஏ., எம்.பி.க்களும் ஒளிய வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மானூர் பஞ்சாயத்து கவுன்சிலர்களை மக்களிடமிருந்து பாதுகாக்க போலீசு படை குவிக்கப்பட்டதைப் போல சட்டமன்ற, நாடாளுமன்றக் கூட்டங்களுக்கும் போலீசைக் குவிக்க வேண்டியிருக்கும். கவுன்சிலர்களுக்கே கறுப்புப் பூனைகள் தேவைப்படுவார்கள்.

இராக்கில் நடப்பது மட்டுமல்ல, இங்கே கங்கை கொண்டானில் நடப்பதும் ஆக்கிரமிப்புதான் என்பதைப் பாமர மக்களும் புரிந்து கொள்வார்கள். அப்போது கோக் எதிர்ப்புப் போராட்டம் விடுதலைப் போராட்டமாக வடிவெடுக்கும்.

*— போராட்டக் குழு*
*ம.க.இ.க; வி.வி.மு;*
*பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு.*


படிப்பகம்

www.padippakam.com

# நாடு அழிகிறது
# பங்குச் சந்தை வளர்கிறது

இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, கடந்த பிப்ரவரி முதல் வாரத்தில் மும்பை பங்குச் சந்தை புள்ளிகள் 10,000-ஐத் தாண்டி புதிய உயரத்துக்கு முன்னேறியது. அது மேலும் உயர்ந்து மேலே போய்க் கொண்டிருக்கிறது. "பாய்ச்சல்; இது வரை கண்டிராத வகையில் முரட்டுக் காளையின் மாபெரும் பாய்ச்சல்; பிப்ர வரி 6-ஆம் தேதி, மும்பை பங்குச் சந் தையின் அதிருஷ்டநாள்!" என்று பெரு முதலாளிகளும் பங்குச் சந்தை முதலீட் டாளர்களும் தரகர்களும் செய்தி ஊட கங்களும் குதூகலத்துடன் கொண்டாடி னர். கோலாகலம், விருந்துகள், வாழ்த் துச் செய்திகள், பொருளாதார நிபுணர்க ளின் பேட்டிகள், எதிர்காலம் பற்றிய ஆருடங்கள் என பங்குச் சந்தை சூதாடி களும் பத்திரிகைகளும் ஒரு திருவிழா வையே நடத்தினர்.

"48 நாட்களில் 10,000 புள்ளி களைத் தாண்டி பங்குச் சந்தை வர்த்தகம் சூடு பிடிக்கத் தொடங்கி விட் டது; பொருளாதாரம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருகிறது. இதன் விளைவாக, நடப்பு நிதியாண்டில் 8.1% பொருளாதார வளர்ச்சியை எட்டி விடு வோம்" என்கிறார், நிதிய மைச்சர் ப.சிதம்பரம். "இல்லை யில்லை; 10%-க்கும் மேலாக வளர்ச்சி இருக்கும் என்று கிளி ஜோசியம் சொல்கி றார், உலக வங்கி கைக் கூலியும் திட்டக் கமிசன் துணைத் தலைவருமான மான்டேக்சிங் அலுவா லியா.

பிப்ரவரியில் 10,000 புள்ளிகளைத் தாண்டி மும்பை பங்குச் சந்தை பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருந்தபோது, அதே மும்பை நகர் அமைந்துள்ள மகாராஷ்டிரா மாநிலத் தின் விதர்பா பிராந்தியத்தில், கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்ட சிறு விவசாயிகளின் எண் ணிக்கை 300 பேரைத் தாண்டிக் கொண் டிருந்தது. மும்பை நகரில் மூடப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களின் எண் ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியது. பட்டினியால் மகாராஷ்டிராவில் மாண் டுபோன பழங்குடியினக் குழந்தைகளின் எண்ணிக்கை 2850-ஐத் தாண்டியது. வேலையிழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை பல பத்தாயிரங்களாக அதிகரித்தது.

நாட்டின் உண்மை நிலவரம் இப்ப டியிருக்க, காங்கிரசு கயவாளிகளும் பங்குச் சந்தை சூதாடிகளும் முதலாளித் துவ மூதறிஞர்களும் நாட்டின் பொருளாதாரம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருவதாகக் காதில் பூ சுற் றிக் கொண்டிருக்கின்றனர். தொழில் நிறுவனங்கள் ஈட்டும் லாபத்திற்கேற்ப பங்குகளின் விலை உயர்வு அமையும் என்பதற்கு மாறாக, தொழில் வளர்ச் சியே மந்த நிலையில் இருக்கும் போது பங்குகளின் விலை மட்டும் வீங்கிக் கொண்டே போகிறது. இதற்கான கார ணத்தையும், இதனால் ஏற்படும் விபரீத விளைவுகளையும் மூடிமறைத்து விட்டு, பங்குச் சந்தை பாய்ச்சலைக் காட்டி பொருளாதாரம் முன்னேறுவ தாக இப்பாசிஸ்டுகள் நம்பச் சொல்கி றார்கள்.

பங்குச் சந்தையின் பிரமிக்கத்தக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணம், இந்திய பங்குச் சந்தை சூதாட்டத்தில் கோடிகோ டியாய் அந்நிய நிதி முதலீடுகள் கட்டுப் பாடின்றி பாய்ந்திருப்பதேயாகும். கடந்த பத்தாண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துவந்த இந்த அந்நிய சூதாட்ட முதலீடுகள் இப் போது ரூ. 2 லட்சம் கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது. கடந்த 2005-ஆம் ஆண்டில் மட்டும் இத்த கைய முதலீடுகள் ரூ. 45,000 கோடிக் கும் மேலாக இந்தியப் பங்குச் சந்தைக ளில் பாய்ந்ததால், பங்குகளின் விலை யும் உயரத் தொடங்கியது. மும்பை பங்குச் சந்தையில் 2005 முடிவில் 9400 ஆக இருந்த விலை புள்ளி கடந்த பிப்ரவரியில் 10,000-ஐத் தாண்டி இன் னும் மேலே போய்க் கொண்டிருக்கி றது. இந்தியத் தொழில் நிறுவனங்

**எதிரும் புதிருமான இந்தியா: 10,000 புள்ளிகளைத் தொட்டுவிட்ட கொண்டாட்டத்தில் மும்பய் பங்குச் சந்தை; கந்துவட்டிக் கடனால் தற்கொலை செய்து கொண்ட சிறு விவசாயி ராமேஷ்வர் சுரோஷேயின் மனைவி அன்னபூர்ணா, மகள் அர்ச்சனா. மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் நடந்துள்ள 301-ஆவது தற்கொலைச் சாவு இது.**







படிப்பகம்

www.padippakam.com

களின் வியாபாரப் பெருக்கத்தாலோ, லாப அதிகரிப்பாலோ இந்தப் பாய்ச்சல் நிகழவில்லை. அந்நிய முதலீடுகளின் அதிகமான புழக்கத்தால் செயற்கையான கிராக்கி ஏற்பட்டு பங்குகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

> **பிப்ரவரியில் 10,000 புள்ளிகளைத் தாண்டி மும்பை பங்குச் சந்தை பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருந்தபோது, அதே மும்பை நகர் அமைந்துள்ள மகாராஷ்டிரா மாநிலத்தின் விதர்பா பிராந்தியத்தில், கடன்சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்ட சிறு விவசாயிகளின் எண்ணிக்கை 300 பேரைத் தாண்டிக் கொண்டிருந்தது.**

மீன்காரனுக்கு தூண்டில் மிதவை மீதுதான் கண் என்பதைப் போல, மற்ற நாடுகளை விட அதிக லாபம் கிடைக்கும் என்பதால் குறுகில் காலத்தில் கொள்ளையடிப்பையே குறியாக வைத்து அந்நிய நிதி முதலீட்டு நிறுவனங்கள் இந்திய பங்குச் சந்தையை நோக்கிப் படையெடுக்கின்றன. காலையில் பங்குகளை வாங்கி மாலைக்குள் விற்று முடித்து கோடிகோடியாய் லாபத்தை அள்ளுகின்றன. ஒருநாள் அல்ல, ஒரு சில நிமிடங்களிலேயே இந்த வியாபாரத்தை முடித்துக் கொண்டு, கிடைத்த லாபத்தோடு இந்த அந்நிய முதலீடுகளும் வெளியேறி விடுகின்றன.

ஒரு அந்நிய நிறுவனம் நேரடியாகவோ அல்லது இங்குள்ள தரகுப் பெருமுதலாளிகளை பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டோ ஒரு தொழில் நிறுவனத்தைத் தொடங்கினால் அது அந்நிய நேரடி முதலீடு (FDI) எனப்படுகிறது. இது ஒப்பீட்டளவில் நீண்ட காலம் இங்கு நிலைத்திருக்கும் முதலீடாகும்.

ஆனால், பங்குச் சந்தையில் குவியும் சூதாட்ட முதலீடு அப்படிப்பட்டதல்ல. அந்நிய நிதி நிறுவன முதலீடு (FII) எனப்படும் இத்தகைய முதலீடுகளை குறுகிய கால முதலீடு என்றும் சூடான நிதி (Hot Money) என்றும் குறிப்பிடுவர். அதாவது இந்தச் சூட்டை கையில் வைத்திருக்க முடியாமல் கைக்கு கை வேகமாக பணம் கைமாறும். நிமிடத்திற்கு நிமிடம் கைமாறும் இந்த சூடான பணம் உலகெங்கும் பங்குச் சந்தைகளில் வேகமாகச் சுழன்று பங்குச் சந்தை சூதாட்டத்தை ஊக்குவித்து உச்சாணிக்குக் கொண்டு சென்று பறந்துவிடும். காசோலை எழுதி அஞ்சல் செய்து அனுப்பக் கால தாமதமாகும் என்பதால், இந்தச் சூடான நிதியை காசோலை மூலம் கொடுக்கல் - வாங்கல் செய்வதில்லை. மின்னஞ்சல் (ஈமெயில்) மூலம் இந்தப் பணம் புழங்குவதால் இதை ''ஈ பணம்'' (e money) என்றும் குறிப்பிடுவர்.

ஈ போல மொய்த்து உடனே பறந்து விடும் இந்தச் சூதாட்ட முதலீடானது, பொருளாதாரத்தையே சூதாட்டமாக மாற்றிவிடுமளவுக்கு ஆபத்தானது. 1997-இல் தென்கிழக்காசிய நாடுகளின் பங்குச் சந்தைகளில் வெள்ளமென இத்தகைய அந்நிய சூதாட்ட முதலீடுகள் குவிந்ததும், அந்நாடுகளின் பங்குச் சந்தைகளின் விலைப்புள்ளிகள் கிடுகிடுவென உயர்ந்து விண்ணைத் தொட்டன. அதைக் காட்டி அந்நாடுகளை ''ஆசியப் புலிகள்'' என்று ஏகாதிபத்திய உலகம் பாராட்டிப் புகழ்ந்தது. பின்னர், இந்தச் சூடான சூதாட்ட முதலீடு வற்றத் தொடங்கியதும், அந்நாடுகளின் பொருளாதார அடித்தளமே ஆட்டங்கண்டு அதலபாதாளத்தில் வீழ்ந்தது. புலிப் பாய்ச்சலாக சித்தரிக்கப்பட்ட அந்நாடுகளின் பொருளாதாரம் எலிப் புழுக்கைகளாகி விட்டன.

தென்கிழக்காசிய நாடுகளின் வழியில் இப்போது இந்தியாவிலும் காட்டாற்று வெள்ளம்போல் அந்நிய சூதாட்ட முதலீடுகள் பல்லாயிரம் கோடிகளில் பாய்ந்து கொண்டிருக்கிறது. அதன் விளைவாக செயற்கையான கிராக்கியால் பங்குகளின் விலைகள் நீர்குமிழிபோல வீங்குகின்றன. விலைப்புள்ளிகள் யானைக் காலாக உப்புகின்றன. நம்பகமான வர்த்தகத்தின், வலுவான பொருளாதார வளர்ச்சியின் வெளிப்பாடுகளே இவை என்று சொல்லி ஏய்க்கிறது ஆளுங்கும்பல்.

உயரங்கள் எப்போதுமே குதூகலத்தைக் கொடுக்கும்; அதே நேரத்தில் அடிவயிற்றில் பயத்தையும் உருவாக்கும். எனவேதான், இந்தச் சூதாட்ட முதலீடுகளின் விபரீத விளைவுகளைப் பற்றி வாய் திறக்காமல், ''புத்திசாலித்தனமாக பங்குச் சந்தையில் முதலீடு செய்யுங்கள்'' என்று பட்டும்படாமல் இந்திய மேட்டுக்குடியினரிடம் எச்சரிக்கிறார், நிதியமைச்சர் ப.சிதம்பரம். ''பயப்படாதீர்கள்; டாலர் அடிப்படையிலான முழு நாணய மாற்றுமுறை காரணமாகவே தென்கிழக்காசிய நாடுகளில் பங்குச் சந்தை சரிந்தது; நம் நாட்டில் முழு நாணய மாற்றுமுறை இல்லாததால், நமக்கு அத்தகைய நிலைமை ஏற்படாது'' என்று நம்பிக்கையூட்டுகின்றன, பங்கு வர்த்தக - ஊக வணிக நிறுவனங்கள். கனவுகளில் மிதக்கும் நடுத்தர - மேட்டுக்குடி வர்க்கத்திடம், ''திறமை இருந்தால் நாமும் முன்னேறிவிடலாம்'' என்று ஆசை காட்டி, பங்குச் சந்தையில் சூதாட அழைப்பு விடுக்கின்றன.

ஆனால், அந்நிய நிதிநிறுவனங்களின் பங்குச் சந்தை முதலீடுகளும் பரிமாற்றங்களும் வெறும் சூதாட்டம் மட்டுமல்ல; அது நாட்டை மீண்டும் காலனியாக்கும் ஏகாதிபத்திய சதிகளின் ஓர் அங்கம் ஆகும். கடந்த 2004-ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த மறுவாரத்தில், தனியார்மயம் - தாராளமயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளுக்கு இடதுசாரிகளால் பாதிப்பு வரலாம், என்ற வதந்தி பரவியதும், அந்நிய நிதி நிறுவனங்கள் மும்பை பங்குச் சந்தையில் ரூ. 1,33,000 கோடிக்கு மேல் வீழ்ச்சியைத் தோற்றுவித்து காங்கிரசு கூட்டணி அரசை எச்சரித்தன. எங்களுக்குச் சாதகமாக மறுகாலனியாதிக்கக் கொள்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தாவிடில் இந்தக் கதிதான் ஏற்படும் என்று மிரட்டின. அவற்றுக்குப் பணிந்து விசுவாசமாக காங்கிரசு அரசு வாலாட்டியதாலேயே இப்போது அவை பல லட்சம் கோடிகளை பங்குச் சந்தை சூதாட்டத்தில் குவித்து சூறையாடுகின்றன. புலி வாலைப் பிடித்தவன் கதையாக, இத்தகைய ஆபத்தான அந்நிய முதலீடுகளைக் கட்டுப்பாடின்றி அனுமதித்துக் கொண்டு, அதன் இழுத்த இழுப்புகளுக்கேற்ப காங்கிரசு கூட்டணி அரசு சென்று கொண்டிருக்கிறது; பொருளாதாரமோ பாதாளத்தை நோக்கி பாய்ச்சலுடன் முன்னேறுகிறது.

நாட்டை மறுகாலனியாக்கி, தொழிலையும் விவசாயத்தையும் மரணக் குழியில் தள்ளிவிட்டு, பங்குச் சந்தை பாய்ச்சலை கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது ஆளுங்கும்பல். இந்த வக்கிரத்தையும் திமிரையும் இனியும் உழைக்கும் மக்கள் சகித்துக் கொண்டிருந்தால், நாளைய வரலாறு நம்மைத்தான் இகழும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# மருந்துப் பரிசோதனை:

# சோதனைச்சாலை எலிகளாக மாற்றப்படும் ஏழைகள்

கோபாலன்; திருப்பூரைச் சேர்ந்த புற்றுநோயாளி; திருவனந்தபுரத்தி லுள்ள வட்டார புற்றுநோய் மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை தொடர்ந்து கொண்டிருந்த வேளையில், ஒரு புதிய மருந்து வெளி நாட்டிலிருந்து வந்துள்ளதாகக் கூறி மருத்துவர்கள் அம்மருந்தை அவருக் குச் செலுத்தினர்.

அந்தப் புதிய மருந்தை அமெரிக் காவின் ஜோன்ஸ் - ஹாப்கின்ஸ் பல்க லைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் பேராசிரியரான டாக்டர் ரூ சிய் [illegible] என்பவர் கண்டுபிடித்திருந் தார். எனினும் மிருகங்கள் மீது செலுத்தி அம்மருந்தின் செயல்திறன், பக்கவிளைவுகள், உயிரியல் சாத்தியப் [illegible] பற்றி அவர் பரிசோ தனையை நிறைவடையச் செய்ய வில்லை. இந்நிலையில் ''பயோக்யூர்'' எனும் மருந்துக் கம்பெனி இப்பல் கலைக்கழகத்துடன் கூட்டுச் சேர்ந்து இப்புதிய மருந்துக்குக் காப்புரிமை பெற்று, பல்லாயிரம் கோடி ரூபாய் களை முதலீடு செய்து, இம்மருந்தைத் தயாரித்து உலகெங்கும் விற்பனை செய்யத் துடித் தது. அதற்கு முன் மனிதர் கள் மீது பரிசோதனை நடத்திப் பார்க்க உலகெங் குமுள்ள ஒப்பந்த மருத் துவ ஆராய்ச்சி நிறுவனங் களிடம் பேரங்களை நடத்தி முடித்தது.

திருவனந்தபுரத்தி லுள்ள புற்றுநோய் மருத் துவ மையம் ஆண்டுக்கு ரூ. 25 லட்சம் பெற்றுக் கொண்டு இந்தப் பரிசோ தனையை நடத்த முன் வந்தது. 2001-ஆம் ஆண்டில் 25 நோயாளிக ளுக்கு இப்புதிய புற்று நோய் மருந்து செலுத்தப் பட்டு பரிசோதிக்கப்பட் டது. மருத்துவர்களை தெய்வமாகக் கருதிய அந்நோயாளிகளுக்கு தங்களுக்கு அங்கீகாரமற்ற ஒரு மருந்து செலுத்தப்பட்டு பரிசோதிக்கப் படுவதைப் பற்றித் தெரியாது. அம் மருந்தினால் தமக்கு ஏற்படும் விபரீத விளைவுகள் பற்றியும் தெரியாது. அந்நோயாளிகளில் ஒருவர்தான் கோபாலன்.

ஒரு அந்நிய மருந்துக் கம்பெனி யின் ஆதாயத்துக்காக, சட்ட விரோத மான முறையில் - மருத்துவ அறிவி யல் கோட்பாடுகளுக்கு எதிரான வகை யில் - மனித உரிமைக்கு எதிரான வகை யில், ஐந்தாண்டுகளுக்கு முன்பு நடந்த இந்த மருத்துவப் பரிசோதனை பற்றி திருவனந்தபுரம் மருத்துவ மையத் தைச் சேர்ந்த சில மருத்துவர்களே அம் பலப்படுத்தியதும் நாடே அதிர்ச்சிக் குள்ளானது. புற்றுநோய் சிகிச்சை பெற் றுவந்த கோபாலனும் இதர நோயாளிக ளும் மாநில மனித உரிமை ஆணையத் திடம் இக்கொடுஞ்செயலுக்கு எதிராக முறையிட்டனர். திருவனந்தபுரம் புற்று நோய் மருத்துவ மையத்தின் மருத்து வர்களும் ஊழியர்களும் நோயாளி களை பரிசோதனைக் கூட எலிகளாக மாற்றும் கொடுஞ்செயலை எதிர்த்துப் போராட்டங்களை நடத்தினர். அதைத் தொடர்ந்து மைய அரசு விசாரணைக் குழுவை நிறுவியது. அதன்பிறகு விசா ரணைக் குழுவின் பரிந்துரைகள் நடை முறைப்படுத்தப்பட்டதா என்று தெரிய் வில்லை. புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வந்த கோபாலனும் இதர நோயாளிகளும் இப்போது எந்த நிலை யில் உள்ளனர் என்றும் தெரிய வில்லை. ஆனால், கோபாலனைப் போல, பல்லாயிரக்கணக்கானோரை பரிசோதனை மனிதர்களாக்கும் சதிகள் நாடெங்கும் வேகமாக நடந்து வரு கின்றன.

ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்கப் பட்டு விலங்கின் மேல் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிறகு மருந்தின் செயல்திறன், பக்கவிளைவுகள், உயிரி யல் தேவை (Bio-avilability) உயிரியல் சமன் (Bio-equivalence) மற்றும் மருந் தின் இதர குணாதிசயங்களை அறிந்து கொள்ள மனிதர்களின் மேல் செலுத்தி பரிசோதனை செய்யப்பட வேண்டும். இந்த பரிசோதனை நான்கு கட்டங் களாக மனிதர்களின் மேல் மேற்கொள்ளப்படு கிறது. இந்த நான்காவது கட்ட பரிசோதனையின் முடிவுக்கு ஏற்ப மருந்து முழுமையாக சந் தைக்கோ அல்லது பயன் பாட்டுக்கோ வருகிறது.

தற்போது பெரும் பான்மையான புதிய மருந்து மூலக்கூறுகளை வளர்ச்சியடைந்த ஏகாதி பத்திய நாடுகளில் இருக் கும் பன்னாட்டு நிறுவ னங்கள்தான் கண்டுபிடிக் கின்றன. சமீபகாலம் வரை இந்நிறுவனங்கள் கண்டுபிடிக்கும் மருந்து களை தங்கள் நாட்டின் மக்கள் மேல் பரி சோதனை செய்து வந் தன. ஏகாதிபத்திய நாடுக ளில் இப்படிப்பட்ட

**திருவனந்தபுரம் - வட்டாரப் புற்றுநோய் மையத்தால் புது மருந்தினைப் பரிசோதனை செய்ய சோதனைச் சாலை எலியைப் போலப் பயன்படுத்தப்பட்ட திருப்பூரைச் சேர்ந்த புற்றுநோய் நோயாளி எம்.கோபாலன்.**





படிப்பகம்

www.padippakam.com

பரிசோதனைகளை மேற்கொள்ள, உடலில் மருந்து செலுத்தி பரிசோதனை செய்ய அனுமதிக்கும் நபர்களின் நலனைப் பாதுகாக்க பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. இந்த விதிமுறைகளை பன்னாட்டு மருந்து கம்பெனிகள் கறாராக பின்பற்ற வேண்டும். பரிசோதனை செய்யும் நிறுவனங்கள் பங்கேற்பவர்களுக்கு மருந்தை பற்றிய விபரங்கள், பக்கவிளைவுகள் பற்றித் தெளிவாக - முழுமையாக கூறி பங்கேற்பவர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும். பரிசோதனையில் பங்கேற்பவர்களுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் ஊதியம் முதல் காப்பீடு வரை அனைத்து பாதுகாப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட விதிமுறைகளிலிருந்து சிறிது தவறினாலும் மருந்து கம்பெனிகளைக் குற்றவாளி கூண்டில் ஏற்றலாம். மேற்குறிப்பிட்ட நியாயமான விதிமுறைகளை கடைப்பிடிப்பதனால், ஒரு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும் செலவில் ஏறத்தாழ 40 சதம் பரிசோதனைக்காகவே செலவாகிறது. அதாவது, பன்னாட்டு மருந்துக் கம்பெனிகள் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 33,600 முதல் 42,000 கோடி ரூபாய் வரை பரிசோதனைக்காக செலவு செய்கின்றன. இந்தச் செலவைக் குறைத்து இலாபத்தை உயர்த்த, பன்னாட்டு மருந்துக் கம்பெனிகள் சில ஆண்டு காலமாக மருந்துப் பரிசோதனையை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆரம்பித்துள்ளன.



பன்னாட்டு மருந்து நிறுவனங்களுக்காக இந்திய மக்களைப் பலியிடத் துணிந்துள்ள திருவணந்தபுரம் வட்டார புற்று நோய் மையம்.

நம் நாட்டில் புதிய பொருளாதாரக் கொள்கையின் தொடர் தாக்குதலால் வாழ்விழந்த எண்ணற்ற மக்கள், இதன் விளைவாக குடும்பத்தையும் மானத்தையும் காப்பாற்ற உடலையும் உயிரையும் இழக்கத் தயாராக இருக்கும் சூழல் ஒருபுறம்; அவர்களின் அறியாமையின் விளைவாக, மருந்துப் பரிசோதனைக்கு குரங்குகளைவிட மனிதர்கள் மலிவான விலையில் உள்ள சூழ்நிலைகள் மறுபுறம்; மருந்து பரிசோதனையை மேற்கொள்ள குறைவான கூலியில் மருத்துவர்கள், நுண்ணுயிரியல்-உயிரி தொழில் நுட்ப வல்லுனர்கள் மற்றும் பரிசோதனை கட்டுப்பாட்டுக்கு பெயரளவிலான விதிகள் ஆகியவை இன்னொருபுறம். இவையனைத்தும் மருந்துப் பரிசோதனைக்கு ஏற்ற களமாய் இருப்பதால், பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவுக்குள் வலையை விரிக்கின்றன.

நீலச்சிலுவை சங்கம் (Blue cross), விலங்குகள் துயர் துடைப்பு சங்கம் (SPCA) விலங்குகான மக்கள் (People for animals), விலங்குகள் மீதான சோதனைகளை கட்டுப்படுத்தல் மற்றும் தடை செய்தலுக்கான குழு (CPCSEA) போன்ற அமைப்புகளின் விருப்பத்திற்கு இணங்க மத்திய மற்றும் மாநில அரசுகள் விலங்குகளின் மேல் நடத்தப்படும் ஆய்வு மற்றும் நலன் காக்க பல்வேறு கமிட்டிகள் உருவாக்கியும், ஆணை பிறப்பித்தும் வருகின்றன. இப்படி நாய்க்கும், குரங்குக்கும், பூனைக்கும் ஒப்பாரி வைக்கும் அரசு, இந்திய தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப, மனிதர்களின் மேல் நடக்கும் மருந்துப் பரிசோதனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக வைத்திருந்த அரைகுறையான விதிகளையும் தளர்த்திவிட்டது. *(டெக்கான் கிரானிகல், அக்.29, 2005)*

குரங்கைவிட மலிவான விலையில் பரிசோதனைக்கான மனிதர்கள், குறைந்த கூலியில் வல்லுனர்கள் மற்றும் தளர்த்தப்பட்டு இருக்கும் அரசின் விதிமுறைகள் - இவற்றின் காரணமாக பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளும், ஒப்பந்த மருந்துப் பரிசோதனை நிறுவனங்களும் இந்தியாவில் உள்ள ஏழை, எளிய மக்களின் உயிரைச் சூறையாட ஆரம்பித்துள்ளன. நம் நாட்டில் மருந்துப் பரிசோதனையை மேற்கொள்வதன் விளைவாக பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு, ஒவ்வொரு மருந்துக்கும் சராசரியாக 1115 கோடி ரூபாய் கூடுதல் இலாபமாகக் கிடைக்கிறது.


தற்சமயம் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகள் நேரடியாகவோ அல்லது பன்னாட்டு-தரகு முதலாளித்துவ ஒப்பந்த மருந்துப் பரிசோதனை நிறுவனங்கள் மூலமாகவோ இத்தகைய சோதனைகளைச் செய்து வருகின்றன. கிளாக்ஸோ, ரோச், பைஷர், நோவோ நோர்டிஸ்க், அவெண்டிஸ், இலி லில்லி, நோவார்டிஸ் போன்ற மருந்து கம்பெனிகள் நேரடியாக களத்தில் இறங்கியுள்ளன.

இன்னொருபுறம் பன்னாட்டு ஒப்பந்த பரிசோதனை நிறுவனங்களான பயோகான், குயுன்டில்ஸ், ஆம்னிகேர், பார்ம்-ஓல்ம், பார்ம்நெட் மற்றும் இந்திய தரகு முதலாளித்துவ நிறுவனங்களான விப்ரோ, ரிலையன்ஸ், டாபர், லோட்டஸ் லேப்ஸ், விம்டா லேப்ஸ், ஜிஎஸ்கே, சிரோ ஆகியவை மருந்துப் பரிசோதனைகளை பன்னாட்டு நிறுவனங்களுக்குச் செய்து தருகின்றன. கூடுதலாக அரசு ஆய்வு நிறுவனங்கள், தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள் மற்றும் கணக்கிலே வராமல் எந்த ஒரு அனுமதியும் பெறாமல் திருட்டுத்தனமாக பரிசோதனையை மேற்கொள்ளும் நிறுவனங்களும் இத்தகைய பரிசோதனைகளைச் செய்து வருகின்றன. அதிகாரபூர்வ தகவல்படி, இந்தியாவில் தற்சமயம் 300-க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் மனிதர்கள் மேல் மருந்துகளைச் செலுத்தி ஆய்வு செய்கின்றன. இப்பரிசோதனையில் பங்கேற்பவர்களுக்கு எந்த ஒரு பாதுகாப்புமில்லை; அதிக

www.padippakam.com

பட்சமாக ஒவ்வொரு மருந்து பரிசோதனைக்கும் ரூ.5000 கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் இந்நிறுவனங்கள் கணிசமான இலாபத்தைச் சுருட்டுகின்றன.

இந்தப் பின்னணியில் தகவல் தொழில்புரட்சிக்கு அடுத்தபடியாக உயிரிதொழில் நுட்பவியல் (Bio-technology) புரட்சி வரப்போவதாக ஆளும் வர்க்கம் அவ்வப்பொழுது கூறிக்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பெங்களூரில் உள்ள சிலிகான் பள்ளத்தாக்குக்கு (தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் குவிந்த இடம்) இணையாக ஆந்திர மாநில அரசு மரபியல் பள்ளதாக்கை (Genomic valley) ஐதராபாத்தில் அமைத்துள்ளது. தமிழக அரசு தன் பங்கிற்கு உயிரிதொழில் நுட்பவியல் பூங்காவை அமைத்துள்ளது. பல்வேறு மாநிலங்கள் மேற்குறிப்பிட்ட உயிரிதொழிற் நுட்பவியல் பூங்காவை அமைத்துக் கொண்டு வருகின்றன. இந்த வகைப்பட்ட பூங்காங்கள் - பள்ளத்தாக்குகளில் நூற்றுக்கணக்கான பன்னாட்டு மற்றும் இந்திய தரகு முதலாளிகளின் ஒப்பந்த ஆய்வு நிறுவனங்கள் (Contract research organisations) இடம் பிடித்துள்ளன. இந்த ஒப்பந்த ஆய்வு நிறுவனங்களில் பெரும்பான்மையானவை ஒப்பந்த மருந்து பரிசோதனை நிறுவனங்கள் (Contract clinical trials research organisations) ஆகும். பாரத் பயோடெக் என்ற நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கிருஷ்ணா, ''மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்த மருந்துப் பரிசோதனை நிறுவனங்கள் 2010-இல் இந்திய தகவல் தொழில்நுட்ப துறையை விட கூடுதலான வருமானத்தை ஈட்டி கொடுக்கும்'' *(பிசினஸ் லைன், செப்.22, 2005)* என்று கூறுகிறார். இந்த ஒப்பந்த மருந்துப் பரிசோதனை நிறுவனங்கள் 2001-இல் வெறும் 129 கோடி ரூபாயை வருமானமாக கொண்டிருந்தன; 2003-இல் இது 520 கோடி ரூபாயை எட்டியது. 2010-இல் இது குறைந்தபட்சம் 8600 கோடி ரூபாயை எட்டும் என்று வர்த்தக ஆய்வு நிறுவனங்கள் கூறுகின்றன.



**குரங்கைவிட மலிவான விலையில் பரிசோதனைக்கான மனிதர்கள், குறைந்த கூலியில் வல்லுனர்கள் மற்றும் தளர்த்தப்பட்டு இருக்கும் அரசின் விதிமுறைகள் - இவற்றின் காரணமாக பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளும், ஒப்பந்த மருந்துப் பரிசோதனை நிறுவனங்களும் இந்தியாவில் உள்ள ஏழை, எளிய மக்களின் உயிரைச் சூறையாட ஆரம்பித்துள்ளன.**

''இந்நிறுவனங்கள் ஏழை-எளிய மக்களின் வாழ்க்கையைச் சூறையாடுகிறது; உயிர் மேல் பணம் பார்க்கிறார்கள்'' என்று கண்டன குரல்கள் வரும் பொழுதெல்லாம் இந்நிறுவனங்களும் அரசும் ''இந்தியர்களும் புதிய மருந்துகூறுகளைக் கண்டுபிடிப்பதற்கான விலையைக் கொடுக்க வேண்டும்; வெறும் ஐரோப்பியர்களை மட்டும் ஏன் பலிகடா ஆக்கவேண்டும்?'' என்று எதிர்கேள்வி வைக்கின்றன. மேலும், இம்மருந்துப் பரிசோதனையின் மூலம் இந்திய மக்களும் பயனடையப் போகிறார்கள் என்கின்றன. ஆனால், யதார்த்தமோ வேறு. டாக்டர் சந்தரா குல்காட்டி என்பவர், ''இங்கு நடக்கும் பெரும்பான்மையான மருந்துப் பரிசோதனைகள் மூலம் பயன்பாட்டுக்கு வரும் மருந்துகள் இந்திய மக்களின் நோய்களுக்கு பயன் தராது. மேலும், இம்மருந்துகள் இந்திய சந்தைக்கே வராது; அப்படி மீறி வந்தாலும், சாமானியப் பட்ட மக்கள் வாங்கும் விலையில் விற்காது'' என்கிறார்.

இன்னொருபுறம் இந்நிறுவனங்கள் தங்களது தேவைக்கேற்ப தளர்த்திக் கொண்ட அரசு விதிகளை மயிரளவுக்குக்கூட மதிப்பதில்லை. விலங்குகளின் மேல் சோதனையை முடிப்பதற்கு முன்பே மனிதர்களின் மேல் சோதித்துப் பார்க்கின்றன. பரிசோதனையில் பங்கேற்பவர்களுக்கு மருந்தைப் பற்றி கூட விவரிப்பதில்லை. சோதனைக்கு உட்படுத்தப்படுகிறீர்கள் என்று தெரியப்படுத்துவதில்லை; பல இடங்களில் தங்கள் உடல் சுகவீனத்திற்குத்தான் மருந்து செலுத்தப்படுகிறது என்று நம்ப வைக்கப் படுகிறார்கள். இப்படி பல்வேறு பட்ட குறுக்கு வழிகள் மூலம் குறுகிய காலத்தில் சோதனையை முடித்து இந்நிறுவனங்கள் கோடி கோடியாய் இலாபத்தைச் சுருட்டுகின்றன.

இவர்களின் கோடிகளுக்கான இரைகள் யார்? தனியார் மயம், தாராளமயம், உலகமயத்தின் விளைவாக வாழ்க்கையின் விளிம்புக்குத் தள்ளப்படும் பாட்டாளி வர்க்கம்தான். நிக்கோலஸ் பிரமால் என்ற இந்திய நிறுவனம், ஒரு இங்கிலாந்து நிறுவனத்துடன் கூட்டு வைத்துக் கொண்டு புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இழுத்து மூடப்பட்ட நெசவாலைகள் இருக்கும் மத்திய மும்பய் பகுதியில் மையமாக செயல்படுகிறது. வெல்குவிஸ்ட் என்ற நிறுவனத்தில் பெரும்பான்மையாக, வேலையிழந்த நெசவு ஆலைகளின் தொழிலாளிகள் தான் பரிசோதனைக்கான மனிதர்கள். சென்னை அடையாரில் செயல்படும் விம்டாஸ் லேப்ஸ் என்ற நிறுவனத்திற்கு வில்லிவாக்கம் விடுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களும் 'பரிசோதனைக்கான மனிதர்கள்'. இப்படி நாடு முழுவதும் செயல்படும் ஒப்பந்த மருந்துப் பரிசோதனை நிறுவனங்களுக்கு நகர்புறத்தில் இருக்கும் வேலையில்லாப் பட்டாளம் அல்லது வேலை தேடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள்தான் பரிசோதனைக்கான மனிதர்கள்.

நிலமும் நீரும் வாழ்வும் ஏகாதிபத்தியங்களால் சூறையாடப்பட்டு வருவதைப் போலவே, இயற்கையின் உன்னத படைப்பான மனிதனும் ஏகாதிபத்தியங்களின் லாபவெறிக்காகச் சூறையாடப்பட்டு வருகிறான். வேட்டுச் சத்தம் எதுவுமில்லாமல் இரகசியமாக ஒரு பயங்கரவாதப் போர் ஏழை நாடுகளின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இந்த ஏகாதிபத்திய பயங்கரவாதிகளுக்கெதிரான விடுதலைப் போரைத் தொடங்குவது ஒன்றுதான், ஏழை நாடுகளும் மக்களும் சுதந்திரமாக உயிர் வாழ்வதற்கான ஒரே வழி!

**● செஞ்சுடர்**

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

வந்தனர். இம்மிரட்டலுக்குப் பயந்து, பாந்த் சிங்கின் மூத்த சகோதரர் ஹன்ஸா சிங், ஜாபர் கிராமத்தை விட்டே ஓட நேர்ந்தது. பாந்த் சிங் இம்மிரட்டல் களுக்கெல்லாம் பணியாததோடு, இ.பொ.க. (மா-லெ) விடுதலைக் குழு வின் கீழ் இயங்கி வரும் கூலி விவசாயி கள் சங்கத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்.

பாந்த் சிங், கடந்த (2005) ஆண் டில் மட்டும் ஆதிக்க சாதி வெறியர் களால் இரண்டு முறை தாக்கப்பட்டார். அவர் இத்தாக்குதல்கள் பற்றி போலீசில் புகார் கொடுத்த போதும், குற்றவாளி கள் அதிகார வர்க்கத்தின் துணை யோடு, சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, தண்டனை யின்றித் தப்பித்துக் கொண்டனர்.

இப்படிப்பட்ட நிலையில், ஆதிக்க சாதி கும்பல், பாந்த் சிங்கை அழித் தொழித்துவிடும் நோக்கத்தோடு கடந்த சனவரி 5-ஆம் தேதி, அவர் மீது மிகக் கொடூரமான தாக்குதலை நடத்தியது. ஜாட் சாதியைச் சேர்ந்த அப்பி என்ப வன் தலைமையில் வந்த கும்பல், துப் பாக்கியோடு பாந்த் சிங்கைச் சுற்றி வளைத்த பொழுது, அவர் உயிருக்குப் பயந்து ஓட முயலவில்லை. மாறாக, ''உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள்ளுங்கள்'' என ஆதிக்க சாதிவெறியர்களை எதிர்த்து நின்றார். கோடாலியாலும், உருட்டுக் கட்டை களாலும், இரும்புத் தடியாலும் பாந்த் சிங்கைத் தாக்கி, குற்றுயிராக அவரை கோதுமை வயலுக்குள் வீசியெறிந்தது, அக்கும்பல்.

●●●

பீகாரைப் போல மிகவும் பின்தங் கிய மாநிலமாக இல்லாமல், கிராமப்பு றங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி விட்டால், சாதி ஆதிக்கம் ஒழிந்துவிடும் என்ற முதலாளித்துவ மாயையை பாந்த் சிங்கின் மீது நடத்தப் பட்ட தாக்குதல் கலைத்துவிட்டது. பசுமைப் புரட்சியின் மூலம் விவசாயப் பொருளாதார வளர்ச்சியில் சாதனை படைத்துவிட்டதாகக் கூறப்படும் பஞ்சாப் மாநிலமும், பீகாரைப் போலவே மேல்சாதி ஆதிக்கமும், தீண் டாமைக் கொடுமையும் நிறைந்த மாநி லம்தான் என்பதை 2003-இல் நடந்த தல்ஹான் சாதிக் கலவரம் அம்பலப்ப டுத்தியிருக்கிறது. ''2000-ஆம் ஆண்டு தொடங்கியே, தாழ்த்தப்பட்டவர்கள், மேல்சாதி வெறியர்களுக்கு எதிராக போலீசில் கொடுக்கும் புகார்கள் வழக்குகள் பஞ்சாபில் அதிகரித்து வரு கின்றன. இது பஞ்சாபின் கிராமப்புறங் களில் வர்க்க முரண்பாடும், தீண்டாமை கொடுமைக்கு எதிரான போராட்டமும் கூர்மையடைந்து வருவதைக் காட்டுவ தாக'' முதலாளித்துவ சமூக ஆய்வாளர் களே ஒத்துக் கொள்கின்றனர்.

இந்திய ஆளும் கும்பல் திணித்த ''பசுமைப் புரட்சி'' பஞ்சாபில் பொருளாதார சமத்துவத்தைக் கூட ஏற்படுத்தவில்லை. மாறாக, நிலமும், அரசியல் அதிகாரமும் ''இந்து'' மற்றும் சீக்கிய மதங்களைச் சேர்ந்த ஒரு சில ஆதிக்க சக்திகளிடம் குவிவதைத்தான் உறுதிபடுத்தியிருக்கிறது. பாந்த் சிங் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குத் திட்டம் போட்டுக் கொடுத்த ஜஸ்வந்த் சிங், ஜாபர் கிராம பஞ்சாயத்துத் தலைவர் மட்டுமல்ல; 60 ஏக்கர் நிலங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ள நிலப்பிரபு வும் கூட. இத்தாக்குதலில் ஈடுபட்ட மற்ற குற்றவாளிகள் ஒவ்வொருவரும் 20 ஏக்கருக்கு மேலான நிலத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ள பணக்கார விவசாயிகள்.

பஞ்சாப் மாநிலத்தை ஆளும் காங் கிரசு கட்சி, மிகவும் வெளிப்படையா கவே இக்குற்றவாளிகளைப் பாதுகாத்து வருகிறது. பாந்த் சிங் மீது நடத்தப்பட் டுள்ள தாக்குதல் நாடெங்கும் அம்பல மான பின்னும் கூட, அவருக்கு நட்ட ஈடு தர காங்கிரசு அரசு முன்வர வில்லை. சண்டிகர் அரசு மருத்துவ மனைக்கு சமீபத்தில் வந்து போன பஞ் சாப் முதல்வர் அமரீந்தர் சிங், பாந்த் சிங் கைச் சென்று பார்க்காமல் புறக்கணித்த தன் மூலம், தனது அரசு யார் பக்கம் நிற்கிறது என்பதைப் பச்சையாகக் காட்டிக் கொண்டார்.

ஜாபர் கிராம பஞ்சாயத்துத் தலை வர் ஜஸ்வந்த் சிங், ''பாந்த் சிங்கை மாறு கால் மாறு கை வாங்க வேண்டும் எனச் சபதம் போட்டதாக'' ஜாபர் கிராமமே சாட்சி சொல்கிறது. ஆனாலும், அரசி யல் செல்வாக்கின் காரணமாக ஜஸ்வந்த் சிங் கைது செய்யப்பட வில்லை. ''வழக்கைத் திரும்பப் பெறக் கோரி, குற்றவாளிகள் தன்னை சண்டி கர் அரசு மருத்துவமனையிலேயே வந்து மிரட்டுவதாக''க் கூறுகிறார், பல் ஜித் கவுர். அந்தளவிற்கு குற்றவாளிகள் சுதந்திரமாகச் சுற்றி வருகிறார்கள். ஆனால், பஞ்சாப் போலீசோ, ''பாந்த் சிங் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் பாலியல் பலாத்கார வழக்குக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை'' எனக் கூறி, இந்த வழக்கை நீர்த்துப் போகச் செய்யும் வேலையில் இறங்கியுள்ளது.

இத்தாக்குதலைக் கண்டித்து இ.பொ.க. (மா-லெ) விடுதலைக் குழு, ஜாபர் கிராமத்தில் நடத்திய பொதுக் கூட்டத்தைச் சீர்குலைக்க காங்கிரசு கட்சி குண்டர்களையும், ரவுடிகளையும் இறக்கிவிட்டது. பஞ்சாப் போலீசும் தன் பங்குக்கு ஆயுதப் படையைக் குவித்து, கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளைப் பயமுறுத்தியது. எதிர்க்கட்சியான அகா லிதளமும் காங்கிரசு அரசின் இந்த அடாவடித்தனத்தை கண்டிக்க முன்வர வில்லை. மேல்சாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதில், இந்த மதவாதக் கட்சி யான காங்கிரசும்; சீக்கிய மதவாதக் கட்சியான அகாலி தளமும் ஒன்றுபட்டு நிற்கின்றன.

பாந்த் சிங்கின் போராட்ட உணர்வை வரித்துக் கொள்ள வேண்டிய நாம், சாதி ஆதிக்கத்திற்கு எதிராக அவர் நடத்தி வரும் நீண்ட நெடிய போராட்ட அனுபவத்தில் இருந்து இன் னுமொரு படிப்பினையையும் பெற வேண்டும். சாதி ஆதிக்கத்திற்கு எதி ராகச் சட்டவாத வரம்பிற்குள் மட்டும் நின்றுகொண்டு போராட்டங்களை நடத்துவதன் மூலம், குறைந்த பட்ச நீதி கிடைப்பது கூடக் குதிரைக் கொம்பான விசயம் என்பதுதான் அந்தப் பாடம்.

கிராமப்புறங்களைச் சேர்ந்த சாதி ஆதிக்க சக்திகளின் சொத்துரிமையை யும், அரசியல் - சமூக உரிமைகளையும் பறித்தெடுப்பதுதான், தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தும். இதனை சட்டத்தின் மூலமோ, தேர்தல் பாதையின் மூலமோ சாதித்துவிட முடியாது. தேர்தல்கள் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தால் கூட, தாழ்த்தப்பட்டவர் மீதான தாக்கு தலைத் தடுத்துவிட முடியாது என்பதை ஏற்கெனவே உ.பி.யில் நடந்த மாயா வதி ஆட்சி நிரூபித்திருக்கிறது.

இதற்கு மாற்றாக, கிராமப்புறங்க ளில் நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்தி களுக்கும், அவர்களுக்குத் துணை நிற் கும் அரசு இயந்திரத்துக்கும் எதிராக ஆயுதந்தாங்கிய புரட்சிகர விவசாயக் கமிட்டிகளைக் கட்டியமைப்பதுதான் ஒரே தீர்வு. உ.பி., பீகார் போன்ற வட இந்திய மாநிலங்களில் சாதி ஆதிக்க சக்திகள் தனிப்பட்ட படைகளை வைத் திருக்கும் பொழுது, நிலத்திற்காகவும், தீண்டாமைக்கு எதிராகவும் போராடும் ஜனநாயக சக்திகளும் ஆயுதம் ஏந்திய மக்கள் படையைக் கட்டுவதைத் தவிர வேறு வழியும் கிடையாது.

● செல்வம்


Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85 Regn.No.TN/CC(S)Dn/190/06-08

# இட்லருக்கு ஒரு நீதி! புஷ்ஷுக்கு ஒரு நீதியா?

டேவிட் இர்விங் - பிரிட்டனைச் சேர்ந்த நாஜி வரலாற்றாசிரியர். 10 ஆண்டு சிறைத் தண்டனையை எதிர்பார்த்து ஆஸ்திரியா நாட்டின் வியன்னா நீதிமன்றத்தின் முன் இவர் நின்று கொண்டிருக்கிறார். "இலட்சக்கணக்கான யூதர்களை பெருங்களப்பலிக்கு (Holocaust) ஆளாக்கியதாக இட்லர் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு பொய்யானது. உண்மையில் யூதர்களின் முன்னேற்றத்திற்குத்தான் இட்லர் உதவியிருக்கிறார்" என்று தொடர்ந்து பேசியும் எழுதியும் வருகிறார் இர்விங். நாஜிகளின் போர் குற்றங்களை மறைப்பதே ஆஸ்திரிய சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாம். எனவே, சென்ற டிசம்பர் மாதம் ஆஸ்திரிய நாட்டின் எல்லைக்குள் நுழைந்தபோது இவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மன்னிப்புக் கேட்டாலும் தண்டனை உறுதி என்கிறார்கள் வழக்குரைஞர்கள்.



இராக்கின் அபுகிரைப் சிறைச்சாலையில், ஒரு கைதியை மலத்தால் குளிப்பாட்டி, மனவியல் ரீதியாகச் சித்திரவதை செய்யும் கொடூரம்.

இராக்கின் அபு கிரைப் சிறைக் கொடுமைகள் குறித்த புதிய வீடியோ படங்களை வெளியிட்டிருக்கிறது ஆஸ்திரேலியாவின் எஸ்.பி.எஸ். தொலைக்காட்சி. இராக் கைதிகளை மலத்தில் அமிழ்த்துவதும், கோழி அறுப்பது போல கைதிகளின் கழுத்து நரம்பை அறுப்பதும், பெண்கள் மீதான வன்புணர்ச்சியும் மட்டுமல்ல; ஆண் கைதிகளைக் கும்பல் கும்பலாக அம்மணமாக்கி துப்பாக்கி முனையில் அவர்களைச் சுய இன்பம் மேற்கொள்ள வைத்து, அதை வீடியோவும் எடுத்திருக்கின்றன, அமெரிக்க இராணுவ மிருகங்கள்.

'பிரிட்டிஷ் சிப்பாய்கள் நாகரிகமானவர்கள்' என்ற பொய்ப் பிரச்சாரத்தை அம்பலமாக்கியிருக்கிறது 'நியூஸ் ஆஃப் த வேர்ல்ட்' எனும் இலண்டன் நாளிதழ். இராக்கின் பாஸ்ரா நகர இளைஞர்களை பிரிட்டிஷ் சிப்பாய்கள் துப்பாக்கிக் கட்டையால் அடித்து நொறுக்குவதையும் அதை வீடியோவில் பதிவு செய்யும் அதிகாரி ரசித்துச் சிரிப்பதையும் அந்நாளேடு அம்பலப்படுத்துகிறது.

"இவ்வாறு நம் இராணுவத்தைக் கொச்சைப்படுத்தும் நாற்காலி அறிவாளிகளுக்குப் போரைப் பற்றி என்ன தெரியும்? நமது இராணுவம் அறவுணர்ச்சி கொண்டது, நெறிகளுக்குக் கட்டுப்பட்டது. எதிரிகளுக்கோ (இராக் போராளிகளுக்கு) அறம், ஒழுக்கம், மனித உரிமை பற்றிய கவலை எதுவும் கிடையாது" என்று இதற்குத் திமிராகப் பதிலளித்திருக்கிறார், பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை செயலர்.

கோழியை அறுப்பது போல, இராக்கிய கைதியின் கழுத்து நரம்பை அறுக்கிறது, அமெரிக்கப் பயங்கரவாத இராணுவம்.



"அமெரிக்காவின் குவான்டனமோ சித்திரவதைக் கூடத்தை உடனே மூடவேண்டும்" என்று ஐ.நா. செயலர் கோபி அன்னான் கூறியிருப்பதை, "விவரம் புரியாதவரின் பிதற்றல்" என்று நக்கலடித்திருக்கிறார் அமெரிக்க பாதுகாப்புத்துறைச் செயலர் ரம்ஸ்ஃபீல்டு.

கொலைக் குற்றம் நடக்கவில்லை என்று பொய்யுரைத்த நாஜி குற்றவாளிக்கு 10 ஆண்டு தண்டனை என்றால், ஆக்கிரமிப்புப் படுகொலையும் சித்திரவதையும் நியாயம் என்று பேசும் அமெரிக்க, பிரிட்டிஷ் ஆதிக்க வெறியர்களை எந்த நீதிமன்றத்தில் விசாரிப்பது? சித்திரவதை செய்த அமெரிக்க சிப்பாயை விடவும் சிரித்து மகிழும் பிரிட்டிஷ் அதிகாரியை விடவும் பன்மடங்கு கொடியவர்கள் இந்த மேலாதிக்கவாதிகள். 'இவர்களுக்கு மக்கள் மன்றத்தில் மரணதண்டனை உறுதி' என்பதை இந்தியா வரவிருக்கும் போர் கிரிமினல் புஷ்ஷுக்கு உணர்த்துவோம்! அது அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி மடிந்த லட்சோபலட்சம் மக்களுக்கு நாம் செலுத்த வேண்டிய அஞ்சலி!

படிப்பகம்